பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 179

ஞாயிற்றுக்கிழமை
25 மே 2025

வைகாசி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## நிமோனியாவால் முதியவர் பலி!

யாழ்ப்பாணம், மே 25
யாழ்ப்பாணம் - வயாவிளான் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் நிமோனியா காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள் 15

# மாறுகிறது அமைச்சரவை: அரசு தீவிர ஆலோசனை!

### விரைவில் உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, மே 25
அமைச்சரவையில் சில மாற்றங்களைச் செய்வது குறித்து அரச உயர்மட்டங்களில் ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 15

வெற்றிலைக்கேணியில் இன்று

## காணி ஆக்கிரமிப்புக்கு எதிரான சட்ட உதவி!

யாழ்ப்பாணம், மே 25
காணி ஆக்கிரமிப்புத் தொடர் பான அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக சட்ட உதவிகள் வழங்குவதற்கான சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று வெற்றிலைக்கேணியில் இன்று ஞாயிற்றுக் 15

## கிளிநொச்சி – முழங்காவிலில் அரச காணிகள் அபகரிப்பு!

### திடீரென முளைத்துள்ள கடைகள்

கிளிநொச்சி, மே 25
கிளிநொச்சி - பூநகரி முழங்காவில் பகுதியில், நாச்சிக்குடா சந்தியை அண்மித்து மன்னார் யாழ்ப்பாணம் வீதியோரமாக உள்ள கடைகள் காணிகளை அடாத்தாக அபகரிக்கும் 15

## தமிழினப்படுகொலையில் இந்தியா கள்ளமௌனம்!

விரிவு பக்கம்: 02

யாழ்ப்பாண உள்ளூராட்சிச் சபைகளில் போட்டியிட்ட

## 3,311 வேட்பாளர்கள் இதுவரை செலவு விவரம் சமர்ப்பிக்கவில்லை

யாழ்ப்பாணம், மே 25
உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட்ட வேட்பாளர்களில் 3 ஆயிரத்து 311 வேட்பாளர்கள் இதுவரை தமது 15




'இப்பிடி ஆறுமாதத்தில அமைச்சரவையை மாத்திறதைத்தான் மாற்றம் எண்டு நம்புகினம் போல'

யாழ்ப்பாணம் மாநகரசபையில்

## சட்டவிரோதக் கட்டுமானங்கள்; 4 மாதத்தில் 190 முறைப்பாடுகள்!

யாழ்ப்பாணம், மே 25
யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோதக் கட்டடங்கள் தொடர்பில் கடந்த நான்கு மாதங்களில் 190 முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது. முன்வைக்கப்பட்டுள்ள 15

## ஜே.வி.பி.யின் செயற்பாட்டால் தமிழீழம் மலர்ந்திருக்கும்!

### சொல்கின்றார் சம்பிக்க

விரிவு பக்கம்: 15

வரிவிதிப்பு பேச்சுகள்

## அழைத்தது அமெ. குழு பறந்தது அரச அணி

கொழும்பு, மே 25
அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகள் அலுவலகம், வரிவிதிப்புகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்காக விடுத்த 15

# சஞ்சீவி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | | ஹந்தஹன ராசி சுப பலன் | | NLB ஜய | | மெகா பவர் | |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி | 25.05.2025 | திகதி | 25.05.2025 | திகதி | 25.05.2025 | திகதி | 25.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4081 | சீட்டிழுப்பு இலக்கம் | 1148 | சீட்டிழுப்பு இலக்கம் | 0107 | சீட்டிழுப்பு இலக்கம் | 2187 |
| ஆங்கில எழுத்து | L | வெற்றி இலக்கினம் | ரிஷபம் | ஆங்கில எழுத்து | W | ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 39 68 72 73 | வெற்றி இலக்கங்கள் | 17 21 25 26 | வெற்றி இலக்கங்கள் | 0 9 1 0 | சுப்பர் இலக்கம் | 02 |
| விசேட எழுத்து | L | | | | | வெற்றி இலக்கங்கள் | 10 12 28 74 |

| மஹஜன சம்பத | | தன நிதானய | | அத சம்பத | |
|---|---|---|---|---|---|
| திகதி | 25.05.2025 | திகதி | 25.05.2025 | திகதி | 25.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5839 | சீட்டிழுப்பு இலக்கம் | 1869 | சீட்டிழுப்பு இலக்கம் | 0414 |
| ஆங்கில எழுத்து | L | ஆங்கில எழுத்து | B | ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 0 0 5 3 2 3 | வெற்றி இலக்கங்கள் | 16 34 69 73 | வெற்றி இலக்கங்கள் | 5 3 2 3 |
| | | விசேட எழுத்து | B | | |

# தமிழினப்படுகொலையில் இந்தியா கள்ள மௌனம்

## சீமான் விளாசல்

**சென்னை, மே 25**

**2009 ஆம் ஆண்டில் ஈழத்தமிழினம் மொத்தமும் கொன்றுகுவிக்கப்பட்ட போது அதனை இனப்படுகொலை எனச் சொல்வதற்கு உலகத்தில் ஒருவரும் முன்வராததற்கு இந்தியாவின் மௌனமே காரணம். மொழியால் இனத்தால் வேறான நாடுகள்கூட எம் இனத்தின் பக்கத்தில் அனுதாபத்தோடு ஆரத்த முவி நிற்கின்றன. ஆனால் 10 கோடி தமிழ்மக்கள் பரவிவாழும் இந்தியா ஈழத்தமிழினத்துக்காகக் குரல்கொடுக்கவில்லை என இந்தியாவின் நம் தமிழர் கட்சியின் முதன்மை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.**

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 16ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு நாம் தமிழர் கட்சியின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் நடைபெற்ற இன எழுச்சி மாநாட்டில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்காலில் எமது இனம் கொன்றுகுவிக்கப்பட்ட இதேநாளில் இலட்சக்கணக்கான எம் இனத்தின் பிணங்களுக்கு நடுவே பிரசவமான பிள்ளைகள் தான் இங்கு கூடியிருக்கும் நீங்களும் நானும்.

இந்தியப் பெருநிலத்தில் இருந்து, தமிழகத் தாய் நிலத்தில் இருந்து பெருந்தலைவர் வே.பிரபாகரனை போர்க்களத்துக்குச் சென்று சந்தித்துவிட்டு வந்த ஒரே மகன் நான்தான். எனக்கும் தலைவனுக்கும் இடையே என்ன நடந்தது என்பது எங்கள் இருவருக்கும் மட்டும்தான் தெரியும். உலகத்துக்கு முன்பு விடுதலைப் புலிகளை அழிக்கவேண்டும் என்று துடித்தவர்கள், தவித்தவர்கள் இங்கிருந்த ஆட்சியாளர்கள் தான். எமது இனம் மொத்தமாக கொன்றொழிக்கப்பட்ட துயரம் தோய்ந்த மே18 ஆம் நாளில் ஒரு வருத்தச் செய்தியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவுசெய்தது உண்டா? எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பதிவிட்டாரா? இந்தியா வாய்திறக்காதவரை உலகத்தில் எவனும் வாய்திறக்கமாட்டான் - என்றார். (ச-100)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 25.05.2025 | சனிக்கிழமை | 0547 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| U | 8 1 0 1 5 1 | |

| Super Ball (DLB) | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 25.05.2025 | சனிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2813 | K | 03 19 22 62 |

| சனிதா (DLB) | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 25.05.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| F | 29 46 47 64 | 4974 |

| SASIRI (DLB) | |
|---|---|
| திகதி | தினம் |
| 25.05.2025 | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0689 | 26 47 50 |

| லக்ன ராசி (DLB) | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 25.05.2025 | சனிக்கிழமை | |
| மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 01 09 33 37 | 4525 |

| KAPRUKA (DLB) | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 25.05.2025 | சனிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Z | 23 | 23 71 72 75 | 1989 |

| அத கோடிபதி (DLB) | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 25.05.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 26 57 69 72 | 2639 |

# ஐ.ம.சக்திக்குள் உள்ளகமோதல்

## நால்வர் பதவிதுறப்பு

கொழும்பு, மே 25

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்குள் உள்ளக மோதல் ஏற்பட்டுள்ள நிலையில், அக்கட்சியின் நான்கு உறுப்பினர்கள் தொகுதி அமைப்பாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளனர்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் பட்டியல் ஊடாக கிடைக்கப்பெற்ற ஆசனங்களுக்குரிய உறுப்பினர் தெரிவை மையப்படுத்தியே பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளைத் தொகுதி அமைப்பாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான வசந்த அளுவிகாரே தொகுதி அமைப்பாளர் பதவியைத் துறந்துள்ளார். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் ரத்தொட்டைத் தொகுதி அமைப்பாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ரஞ்சித் அலுவிகாரே, தம்புள்ளைத் தொகுதி அமைப்பாளரும் மாகாண முன்னாள் அமைச்சருமான சம்பிக்க விஜேரத்ன ஆகியோரும் பதவி விலகியுள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் பண்டாரவளைத் தொகுதி அமைப்பாளர் பதவியை அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி துறந்துள்ளார். இந்நிலையில் தொகுதி அமைப்பாளர்களைச் சமரசப்படுத்துவதற்குரிய முயற்சியில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஈடுபட்டுவருகின்றனர். (ச-44)



# 2029 இல் நாமலே ஆட்சிப்பிடமேறுவார்!

## திஸ்ஸ குட்டியாராய்ச்சி நம்பிக்கை

கொழும்பு, மே 25

2029 இல் நாமல் ராஜபக்ச ஜனாதிபதியாவது இந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் உறுதியாகியுள்ளது என்று மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியாக எளிமையாக இருக்கிறார், விமானத்தில் செல்லாமல் வாகனத்தில் செல்கிறார் போன்ற விடயங்களால் மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

ஆனால் மஹிந்த, பொருளாதாரத்தின் முதுகெலும்பாக மேற்கொண்ட வீதிக் கட்டமைப்பு இப்போது இல்லை. அவர் மேற்கொண்ட அதிவேகப் பாதைத் திட்டத்தால் நேரம் மீதமானது.பொருளாதாரம் வேகமாக வளர்வதற்கு வித்திட்டது. இப்போது அந்தத் திட்டமெல்லாம் கிடையாது.

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அரசு கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.நாமல் ராஜபக்சவின் செயற்பாடு காரணமாக எமது மொட்டுக்கட்சி இந்தத் தேர்தலில் முன்னேறியுள்ளது. 2029 இல் நாமல் ராஜபக்சதான் ஜனாதிபதி என்பதில் சந்தேகமில்லை - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.ம.சக்தியுடன் கூட்டிணைவோம்

## மொட்டுக்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, மே 25

நாட்டு மக்கள் விரும்பும் பட்சத்தில் ஐக்கிய மக்கள் சக்தியும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சக்தியும் எதிர்காலத்தில் கூட்டணி அமைக்கக்கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் நாம் இன்னமும் முடிவெடுக்கவில்லை. உள்ளூராட்சிசபைகளில் இணைந்து செயற்படுமாறு மக்கள் அழுத்தம் கொடுத்துள்ளனர். மக்களின் தேவை மற்றும் நாட்டின் தேவைக்கமைய எமது முடிவுகள் மாறக்கூடும். உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஆளுங்கட்சிக்கு பெரும்பான்மைப்பலம் வழங்கப்படவில்லை. எதிரணிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்கவேண்டும் என்ற ஆணையையே மக்கள் வழங்கியுள்ளனர். மக்கள் வழங்கியுள்ள ஆணையை நிறைவேற்றும் பணியிலேயே ஐக்கிய மக்கள் சக்தி ஈடுபட்டுள்ளது. இது சாதகமான திசையில் பயணிக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் கட்சிகள் இணையக்கூடும்- என்றார். (ச-25, 44)

# தவறுகளைத் திருத்தாவிடின் நாடு முன்னேற்றமடையாது!

## மனோ எம்.பி. சுட்டிக்காட்டு

தவறுகளைத் திருத்தி முன்நகரமுடியாவிட்டால் எமது நாட்டின் தேசிய பயணம் நின்ற அதே இடத்திலேயே நிற்கும் என்று மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் அனைத்து மக்களும் இறந்த தம் அனைத்து உறவுகளையும் ஒன்றாக ஒரேநேரத்தில் இலங்கையர்களாக நினைவுகூரும் ஓர் எதிர்காலத்தை நோக்கி நம் நாடு பயணிக்கவேண்டும்.

தெற்கில், வடக்கில் நிகழ்ந்த அரச மற்றும் அரசற்ற பயங்கரவாத நிகழ்வுகளுக்கு எதிரான வெற்றிக் கொண்டாட்டங்களையும்கூட கொண்டாடலாம். ஆனால், இந்த இலக்கை அடைய இலங்கை, 30 வருடகால யுத்தம் நிகழ்ந்தமைக்கான மூல காரணங்களைத் தேடி அறிந்து அவற்றுக்குத் தீர்வுதேட வேண்டும். மஹிந்த, ரணில், அநுர, சஜித் எவராக இருந்தாலும், தீர்வுகள் தேடாவிட்டால், நாம் நின்ற அதே இடத்திலேயே நிற்போம். இதுதான் உண்மை. 1948ஆம் வருட குடியுரிமை வாக்குரிமை பறிப்புச் சட்டங்கள், சிங்களம் மட்டும் சட்டம், பண்டாசெல்வா மற்றும் டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் மற்றும் சந்திரிக்காவின் 2000ஆம் வருட தீர்வுத்திட்டம் ஆகியவை உதாசீனப்படுத்தப்பட்டமை, 13ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமை பல இனங்கள், மதங்கள், மொழிகள் கொண்ட இலங்கையின் பன்முகத்தன்மை அங்கீகரிக்கப்படாமை, கற்றுக் கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தாமை, யுத்தத்தின் பின் மஹிந்த - பான்கிமூன் வெளியிட்ட கூட்டறிக்கை அலட்சியப் படுத்தபட்டமை ஆகிய தவறுகளைத் திருத்தி முன்நகரமுடியாவிட்டால் எமது நாட்டின் தேசிய பயணம் நின்ற அதே இடத்திலேயே நிற்கும் - என்றார். (ச-இ)

# வடக்கு, கிழக்கில் நடந்தது மனிதாபிமான நடவடிக்கையே

## சவேந்திர சில்வா கூறுகின்றார்

**கொழும்பு, மே 25**

**வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற இறுதிப்போர் உண்மையில் போர் அல்ல. புலிகளின் பிடியில் சிக்கியிருந்த மக்களையும் இடங்களையும் மீட்கும் மனிதாபிமான நடவடிக்கையாகும் என முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இராணுவம் புலிகளுடன் இறுதியாக நடத்தியது போர் அல்ல. அது மனிதாபிமான நடவடிக்கையாகும். அது மனிதாபிமான நடவடிக்கையாக இல்லாமல் இருந்திருந்தால் சரணடைந்த 12 ஆயிரம் புலிகளைப் படையினர் கொன்றிருப்பார்கள்.

காயமடைந்த புலிகளுக்குக்கூட வைத்தியம் செய்தோம். அவர்களுக்கு உணவளித்தோம். புலிகளின் பிடியில் சிக்கி இருந்த மக்களை, இடங்களை மீட்டு முழு நாட்டுக்கும் மக்களுக்கும் சுதந்திரம் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையே அது.

புதுமாத்தளன் பகுதியில் நாம் மக்களை மீட்டுக்கொண்டிருந்தபோது பின்னால் நின்று புலிகள் மக்களைச் சுட்டார்கள். புலிகள் தலதா மாளிகையைத் தாக்கினார்கள். காத்தான்குடிப் பள்ளிவாசலைத் தாக்கினார்கள். சிறிமாபோதியைத் தாக்கினார்கள். அரந்தலாவை பிக்குகளைக் கொலைசெய்தார்கள். ஆனால், எமது மனிதாபிமான நடவடிக்கையின்போது எந்தவொரு வணக்கத்தலங்களும் அழிக்கப் படவில்லை - என்றார். (எ-75)

# கடன்சுமையில் தவிக்கும் 54.9 சதவீத குடும்பங்கள்

கொழும்பு, மே 25

நாட்டில் ஏற்பட்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் தற்போது 54.9 சதவீத குடும்பங்கள் கடன்சுமையில் இருப்பதாக மக்கள் தொகை மற்றும் புள்ளியியல் துறை வெளியிட்டுள்ள சமீபத்திய கணக்கெடுப்பு அறிக்கை சுட்டிக்காட்டி யுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

அதிகபட்ச சதவீதமான 31 சதவீத குடும்பங்கள், தங்கள் சொத்துகளை அடமானம் வைத்திருப்பதன் காரணமாக கடனில் மூழ்கின. 21.9 சதவீத குடும்பங்கள் வங்கிக் கடனில் உள்ளன. மேலும் 9.7 சதவீத குடும்பங்கள் வட்டிக்குக் கடன் வாங்குவதால் கடன் சுமையில் உள்ளன.

சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டில் ஏற்பட்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக, இலங்கை குடும்ப அலகுகளில் 60.5 சதவீதத் தினரின் வருமானம் குறைந்துள்ளது. அதேநேரத்தில் நாட்டில் 3.4 சதவீத குடும்பங்களின் வருமானம் மட்டுமே அதிகரித்துள்ளது. பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டாலும் 36.6 சதவீதத்தினரின் வருமானம் மட்டும் மாறாமலேயே இருக்கின்றது- என்றுள்ளது. (ச-இ)

# மரண அறிவித்தல்



## குமாரசாமி திரேசம்மா

**மண்ணில் 20.03.1933 — விண்ணில் 24.05.2025**

76, கோயில் வீதி, யாழ்ப்பணத்தை பிறப்பிடமாகவும் 17/1, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி திரேசம்மா நேற்று (24.05.2025) இயேசுவின் நிழலில் அடைக்கலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெலிச்சோர் - றெபேக்கா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், குமாரசாமி (பிரபல வர்த்தகர் - உரிமையாளர் இராசையா அன்சன்ஸ்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், மைக்கேல், புஸ்பம் மற்றும் அலெக்ஸ்சான்டர் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற சிவபாக்கியம், யோகம்மா ஆகியோரின் மைத்துனியும், கிறிஸ்டின், ராஜினி, (ஓய்வுநிலை ஆசிரியர் -புனித மரியாள் கல்லூரி திருகோணமலை), றெஜினோல்ட் தேவகுமார் (அமெரிக்கா), லின்டா மகிழினி, ரஞ்சித் விஜயகுமார் (அராலி பாம்), விஜித்ஜெயகுமார் (Cycle works - navalar road), லலித் சந்திரகுமார் (கனடா), ராஜித் ஜீவகுமார் (பிரான்ஸ்), சஜித் சாந்தகுமார் (வீதி அபிவிருத்தி திணைக்களம் - யாழ்ப்பாணம்), மெற்றில்டா ஸ்ரெலாஜினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ம.அ.பிரான்சிஸ் (பொறியியலாளர் - ஓய்வுநிலை பாடசாலை வேலைகள் பணிப்பாளர் கல்வி அமைச்சு, வடக்கு, கிழக்கு மாகாணம் & ஓய்வுநிலை வேலைகள் பணிப்பாளர் சுகாதார அமைச்சு) D.மேரி பொன்சேகா (அமெரிக்கா), ச.க.பேரின்பநாயகம் (ஓய்வுநிலை வைத்தியர் - கண்டி மாவட்ட அரச வைத்தியசாலை), R. ஜெயபாலநாயகி, R.வனிதா (பிரான்ஸ்), ஸ்வீற்றா L டொறின் (கனடா), S.மேரிபிரீமா (அபிவிருத்தி உத்தியோகத்தர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), க.செபநேசன் (ஆசிரியர் யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் பருத்தித்துறை), ஆகியோரின் அன்பு மாமியாரும், டனிங்டன், சனட்சுஞ்சுவி , (முகாமைத்துவ உதவியாளர் யாழ் பல்கலைக்கழகம்), ரொஸ்பேக் (Youtuber), P. லக்சஷிகன், ஐசாக் (அமெரிக்கா), ஏனோக (அமெரிக்கா), வான் சலிஸ்ரா பிராத்மி (ஆசிரியை - நீர்கொழும்பு விஜயரட்னம் மகா வித்தியாலயம் ), பிரித்தீபா (லண்டன்), பிரசன்னா (துபாலகம் வட்டு கோட்டை), விவேக் (J.S Auto supply Pvt Ltd) , கிசோர் (Road win international Pvt), சாருக், ஜனன், சேர்மிலன், த்ரேசியா (பிரான்ஸ்), தனுசன் (பிரான்ஸ்), பிரியங்கா (பிரான்ஸ்), பிரியா (கனடா), திவ்வியா (கனடா), லொசாந், பருசாந், ஜெபேசாந், சிமிர்னா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ரிஷோன், ரிக்ஷன், றொகான், ஜெரூன் (லண்டன்), அதீரா (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் (26.05.2025) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் றக்கா வீதி புனித திரேசாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

021 222 9828

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# BCAS CONVOCATION 2024

**1064** AWARDEES

**461** BACHELORS & MASTERS DEGREE HOLDERS


**603** BTEC HND GRADUATES

22,000+ GRADUATES | 3,500+ STUDENTS | 250+ STAFF | 35+ COURSES | 19 INTERNATIONAL AWARDS


## 2024 பட்டமளிப்பு விழாவில் தனது கல்வித் துறை சாதனைகளைக் கொண்டாடும் BCAS

இங்கிலாந்தின் Solent பல்கலைக்கழகம் Southampton, மற்றும் Oxford Brookes பல்கலைக்கழகம் வழங்கும் இளங்கலை பட்டம் மற்றும் முதுகலைப் பட்டம், Pearson BTEC உயர் தேசிய டிப்ளோமா மற்றும் முதுகலை டிப்ளோமா ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்த மாணவர்களை கௌரவிக்கும் British College of Applied Studies (BCAS Campus) இன் வருடாந்த பட்டமளிப்பு விழா சமீபத்தில் சிறப்பாக நடந்து முடிந்தது.

வணிகம், கணினி, பொறியியல், சுகாதாரம் மற்றும் அறிவியல், அளவீட்டியியல், மற்றும் சட்டம் ஆகிய துறைகளை சேர்ந்த பட்டதாரிகள் விழாவில் பங்கேற்றனர். நூற்றுக்கணக்கான மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கான பெருமைக்குரிய நிகழ்வாக இந்த பட்டமளிப்பு விழா அமைந்தது. இது கல்வி சாதனையை மட்டும் அல்லாது, தங்கள் கல்விப் பயணத்திலுள்ள உறுதி, முயற்சி மற்றும் அர்ப்பணிப்பையும் கொண்டாடும் விழாவாக அமைந்தது.



இந்த நிகழ்வை சிறப்பித்த முக்கிய விருந்தினர்கள், திரு. ரஜீவ் அமரசூரிய (இலங்கை வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர்), திரு. டமித் பல்லேவத்த (ஹட்டன் நஷனல் வங்கியின் நிர்வாக இயக்குனர்/தலைமை நிர்வாக அதிகாரி), திரு. சூரிய பிபிலே (Pearson இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான துணைப் பொது மேலாளர்), Ms. அரோஷி நானயக்கார (இலங்கை இயக்குனர்கள் நிறுவனத்தின் தலைவர்), திரு. ராஜேந்திரன் தியாகராஜா (தலைமை நிர்வாகச் செயலற்ற தலைவர்), திரு. டெரேஷ் அமரதுங்க (தலைமை நிர்வாக அதிகாரி) BCAS Campus, பேராசிரியர் ருவான் அபேசேகர (துணைவேந்தர்) BCAS Campus, திரு. ரஜித ரணவீர (தலைமை வளர்ச்சி அதிகாரி) BCAS Campus.





தனது முக்கிய உரையில் திரு. ராஜேந்திர தியாகராஜா பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வாழ்க்கையின் அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேற "நோக்குடனும் உறுதியுடனும்" பயணிக்குமாறு ஊக்கமளித்தார். "இன்று உங்கள் கல்விப் பயணத்தின் முடிவல்ல அது ஒரு புதிய தொடக்கமே," எனக் கூறிய அவர், தொடர்பாடல், நேர்மறையான மனப்பாங்கு, மற்றும் விடாமுயற்சி ஆகியவை எதிர்கால வெற்றிக்கு அடித்தளமாக அமையும் என்பதை வலியுறுத்தினார்.



மேலும், அவர் கூறுகையில்: "உங்கள் BCAS Campus காலத்தில் உருவான நட்புறவுகள் மற்றும் தொடர்புகள் வாழ்க்கை முழுவதும் ஒரு வலிமையான சொத்தாக மாறும். இந்த உறவுகளை தொடர்ந்தும் பராமரியுங்கள். பல ஆண்டுகள் பின்னாலும், இவை உங்கள் முக்கியமான ஆதாரங்களாக இருக்கும்," என்றார்.



BCAS Campus இன் தலைமைத்துவம், உலகளாவிய இணைப்புகளுடன் கூடிய தரமான கல்வியை வழங்கும் தங்களது பணி மற்றும் தொழில் உலகத்திற்குத் தயாரான பட்டதாரிகளை உருவாக்கும் தங்களது குறிக்கோளை மீண்டும் உறுதிபடுத்தினர். இந்த பட்டமளிப்பு விழா, இலங்கையின் முன்னணி தனியார் உயர் கல்வி நிறுவனமாக BCAS Campus தன்னை நிலைநிறுத்திக்கொண்டு வருகின்றதை உணர்த்தியது. கல்வி தரம், புதுமை மற்றும் கல்விசார் சிறப்பை மேம்படுத்தும் தங்களது அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாகவும் இது அமைந்தது.



எங்கள் அனைத்து மாணவர்களுக்கும் அவர்களது சிறப்பான சாதனைகளுக்காக மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்கள் தங்களது வாழ்க்கையின் புதிய கட்டமான வணிக மற்றும் தொழில்முறை பயணத்தை தொடங்குவதில் தொடர்ந்தும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.



அவர்கள் பெற்றுள்ள வெற்றிகள், ஒவ்வொரு மாணவரிலும் BCAS Campus வளர்த்து வரும் திறமையுடன் கூடிய அர்ப்பணிப்பு மற்றும் உயர்தரக் கல்விக்கான உறுதியின் சான்றுகளாகும்.







**HOTLINE : 011 7 999 300** BCAS CAMPUS 356, Galle Road, Colombo 3, Sri Lanka.

SOLENT UNIVERSITY SOUTHAMPTON | OXFORD BROOKES UNIVERSITY | Pearson

COLOMBO | KANDY | KALMUNAI | JAFFNA

info@bcas.lk | www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ உணவகமாகியது அசைவ உணவகம்

யாழ்ப்பாணம், மே 25

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத்தின் புனிதத் தன்மைக்கு கலங்கம் விளைவிக்கும் வகையில் அண்மையில் திறக்கப்பட்ட அசைவக உணவகம் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை திடீரெனச் சைவ உணவகமாக மாற்றப்பட்டுள்ளது.

குறித்த உணவகம் நல்லூர்க் கந்த சுவாமி ஆலய வளாகத்தின் சூழலில் உற்சவகால எல்லைக்குள் யாழ்.மாநகரசபையின் அனுமதியுமின்றிச் சட்ட விரோதமான முறையில் திறக்கப்பட்டது.

குறித்த உணவகத்தை மூடுமாறு வலியுறுத்தி கடந்த வாரம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் தலைமையில் கண்டன ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டதுடன் கடந்த செவ்வாய்க்கிழமை சைவ அமைப்புகள் இணைந்து கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். அத்துடன் கையெழுத்துக்களுடன் கூடிய கோரிக்கைகள் அடங்கிய மனு சைவமக்களின் ஏற்பாட்டில் யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரனிடம் கையளிக்கப்பட்டது. அதனையடுத்து குறித்த உணவகத்துக்கு முன்பாக, வீதியோரமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்த உணவகத்தின் பெயர்ப்பலகையும் யாழ். மாநகரசபையினரால் அகற்றப்பட்டது. இந்த நிலையில் சைவமக்களின் உணர்வுகளுக்குத் தலைசாய்த்தும், சைவமக்கள், அமைப்புகளின் எதிர்ப்புகளுக்கு மதிப்பளித்தும் அசைவ உணவக நிர்வாகத்தினர் சைவ உணவகமாக மாற்றப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர். (ச-66)


# ரூபா வலுவடைவு

கொழும்பு, மே 25

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த வியாழக்கிழமையுடன் ஒப்பிடுகையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வலுவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணயமாற்று வீத அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 295 ரூபா 18 சதமாகப் பதிவாகியுள்ளதுடன் விற்பனை விலை 303 ரூபா 58 சதமாகப் பதிவாகியுள்ளது. (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆனாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், சமாளித்துவிடுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டா கும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன்வாங்கநேரிடும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் ஏற்படாது.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரவகையில் வீண்செலவுகள் ஏற்படும். நண்பர்களிடம் எதிர்பார்த்து இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு வார்த்தை நல்லபடிமுடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். மனதில் துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறனும் அதிகரிக்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். இளையசகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். உறவினர்கள் மூலம் கிடைக்கும் தகவல் மகிழ்ச்சிதரும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்புத் தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தொடர்புகொண்டு பேசுவது உங்களை உற்சாகப்படுத்தும்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர்ச்செலவுகளால் கையிருப்புக்கரையும். தாய்வழி உறவினர்களுடன் இணக்கமாக நடந்து கொள்வது நல்லது. வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். அதேபோல் கடன்கள் விஷயத்திலும் சற்றுக் கவனம் செலுத்துவது நல்லது. சிலருக்கு தந்தைவழி உறவினர்கள் மூலம் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில்குடும்பத்துடன்தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டிவரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சிதரும்.



வலயமட்ட 20 வயதுப் பெண்கள் பிரிவு கரம் போட்டியில் யாழ்.மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் சம்பியனாகி மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. இந்தப் போட்டி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-25)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 25
விளைவேலி ஆதினம் சாவகச்சேரி நுணாவில் மேற்கு மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா ஜூன் மாதம் முதலாம் ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும், 11 ஆம் திகதி புதன்கிழமை பூங்காவனமும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச- 25)

## வலுதூக்கல் வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 25
வெளிச்சம் வாழ்வியல் வளர்ச்சி அமைப்பின் ஏற்பாட்டில், வலுதூக்கல் வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு, புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. அமைப்பின் தலைவர் எஸ்.பி.பீற்றர்போல் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி குமாரசாமி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.சாரங்கன், கௌரவ விருந்தினராக நல்லூர்ப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் செ.சத்தியன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25)



## திருக்கேதீச்சர ஆலயத்தில் காளாஞ்சி வழங்கும் நிகழ்வு

மன்னார், மே 25
வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீச்சர ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை உபயகாரர்களுக்கான காளாஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

திருக்கேதீச்சர ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து திருநெல்வேலி வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் காலை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து திருக்கேதீச்சர ஆலயத்துக்கு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் செங்குந்த மரபுடையவர்களால் காளாஞ்சி எடுத்துச்செல்லப்பட்டு திருநெல்வேலி கென்னடி வீதியிலுள்ள சண்முகநாதன் கபிலன் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டு பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும் வழங்கப்பட்டது. நிகழ்வில் ஆலய திருப்பணிச்சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர். திருக்கேதீச்சர ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 30ஆம் திகதி பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கப்படவுள்ளது. (ச)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மே 25
"செல்வபூமி" முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகம் ஸ்ரீ புவனேஸ்வரி தேவஸ்தான அலங்கார உற்சவம் கடந்த செவ்வாய்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இந்த உற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும், மாலை 6 மணிக்கு திருவூஞ்சலும் நடைபெறும். ஜூன் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு வைரவர் பூஜையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## மஹா யக்ஞம்

யாழ்ப்பாணம், மே 25
குருபூரணை தினத்தை முன்னிட்டு சிறப்பு காயத்ரி மஹா மந்திர மஹா யக்ஞம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை அருள்மிகு நல்லூர் சிவன் கோவிலில் இடம்பெறவுள்ளது. அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

## மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்

யாழ்ப்பாணம், மே 25
வடக்கு மாகாணசபை பிரதம செயலாளர் சட்டத்தரணி இலட்சுமணன் இளங்கோவனுக்கு சேவைநலன் பாராட்டும், மணிவிழாவும் புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

கலைப்பெருமன்றத்தின் செயலாளர் பேராசிரியர் கா.குகபாலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார்.

சட்டத்தரணி இ.இளங்கோவன், பல்வேறு அமைச்சுகளின் செயலாளராக சேவையாற்றியவரும், புங்குடுதீவு கலைப்பெருமன்றத்தின் தலைவரும், வட இலங்கை சர்வோதய சர்வதேச இணைப்பாளரும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

சொல்லில் இங்கிதம் என்பது திறமையாகப் பேசுவதைவிட சிறந்தது.

– பேகன் –

# உப்பிலும் புலிப்பூச்சாண்டியா?

'உப்பைத் தெற்குக்கு அனுப்பவேண்டாம் என்று போராடுகின்றனர். பிரபாகரனின் உப்பு, வடக்கு உப்பு, தெற்கு உப்பு என்றெல்லாம் உப்பில் வகைப் பாடுகள் இல்லை. இருப்பது ஒரேயொரு உப்புத்தான். அது இலங்கையின் உப்பு' இவ்வாறாக நாடாளு மன்றத்தில் வைத்துத் தெரிவித்துள்ளார் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி. நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, உப்பளப் பணியாளர்களின் போராட்டம் தொடர்பிலும், உப்பை வடக்கில் வைத்து முடிவுப் பொருளாக மாற்றவேண்டும் என்றும் மிக நேர்மை யான முறையில் கதைக்கப்போக, அர்ச்சுனாவின் கருத்துகளை அப்படியே மடைமாற்றி, கூறாத ஒன்றைக் கூறியதாகக் காண்பித்து, உப்பு விடயத்தில் கூட பிரபாகரன், வடக்கு, தெற்கு என்று பேச வேண்டிய அவசியம் அமைச்சர் ஹந்துன்நெத்திக்கு ஏற்பட்டிருக்கின்றது.

நாட்டு மக்களுக்கு உப்பைக்கூட வழங்குவதற்கு சுரணையற்ற அரசாங்கமாகத்தான் தற்போதைய அரசாங்கம் மாறியிருக்கின்றது. உப்புப் பைக்கற் ஒன்றின் விலை 350 ரூபாவையும் தாண்டிச் செல்லும் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது. நாடாளுமன்றத் தேர்தலொன்று தற்போது நடத்தப்பட்டால், தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றுவது அதோகதி என்றாகிவிட்டநிலையில்தான், உப்பு விடயத்தை வசதியாக மடைமாற்றுவதற்கு எத் தனித்திருக்கின்றார் சுனில் ஹந்துன்நெத்தி. அவரின் கருத்துகள் சாதாரண எதிர்ப்பு மனோநிலையினதோ அல்லது மாற்றுக்கருத்துகளின் பாற்பட்டதோ அல்ல. மாறாக, வலுவாகக் கண்டிக்கத்தக்க பாரதூர மான குற்றங்கள். எனவே, தனது கருத்துகளுக்காக ஹந்துன்நெத்தி மன்னிப்புக்கோரவேண்டும்.

'ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பை பொதியிடலுக்காக வேறு இடங்களுக்குக் கொண்டுசெல்லவேண்டாம். மாறாக, ஆனையிறவு உப்பளத்தில் பொதியிடும் வசதியை ஏற்படுத்தி, உப்பை முடிவுப்பொருளாக மாற்றினால் அதன் பெறுமதி அதிகரிக்கும். இதனால், தமது வாழ் வாதாரமும் பிரதேசத்தின் பொருளாதாரமும் உய ரும். அத்துடன் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும்' என்பதுதான் ஆனையிறவு உப்பளப் பணியாளர்கள் வலியுறுத்திவரும் விடயம். இந்த நியாயமான காரணங்களைத் தெற்கு மக்கள் மிகத்துல்லியமாக புரிந்துகொள்ளவேண்டும். புலிகளை வைத்துப் பூச்சாண்டி காட்டும் படலத்தின் தொடக்கம் இதுவல்ல. அத்துடன், இது இத்துடன் முடிந்துவிடப் போகும் கதையுமல்ல. எதற்கெடுத்தாலும் புலி களைக் கொண்டுவந்து தென்னிலங்கை மக்கள் மத்தியில் ஒரு கிலியை ஏற்படுத்தி அதில் குளிர்காய் வதுதான் அரசாங்கங்களின் அதரப் பழசான யுக்தி யாக இருந்துவந்தது. ராஜபக்சக்களின் இருப்பு, அரசியல் நகர்வுகள், வாக்குவங்கி என அனைத்துமே இந்தப் புலிப்பூச்சாண்டியைச் சுற்றியே பின்னப்பட் டிருந்தன. தற்போது தேசிய மக்கள் சக்திக்கும் அர சியல் இருப்பை உறுதிப்படுத்த புலிப்பூச்சாண்டி தேவைப்படுகின்றதா? என்ற நியாயமான சந்தேகம் ஹந்துன்நெத்தியின் கருத்துகளில் இருந்து வெளிப்படுகின்றன.

மக்களுக்கு வழங்கவேண்டியவற்றை வழங்காமல் இருந்துகொண்டு, புலிகள், பிரபாகரன், வடக்கு, தெற்கு என்று புராணம் பாடிக்கொண்டிருப்பதால் எந்த மாற்றங்களும் நிகழ்ந்துவிடப்போவதில்லை. அத்தகைய செயற்பாடுகளை தெற்கு மக்கள் விரும்புகின்றார்கள் என்றால், இன்றும் கோத்த பாயவே ஜனாதிபதியாக இருந்திருப்பார். எனவே, வினைத்திறனான செயற்றிட்டங்கள் மூலமே தனது நற்பெயரையும், ஆட்சியையும் அரசாங்கம் தக்கவைக்கவேண்டும். மாறாக, புலிப் புராணங்க ளால் அல்ல.




# மாடி வீடு வேண்டாம் காணியே வேண்டும்

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம்

நுவரெலியா, மே 25

தங்கள் உழைப்புக்கு ஏற்ற ஊதிய உயர்வு மற்றும் வீடமைப்புக்கான காணி உள்ளிட்ட உரிமைகளை வலியுறுத்தி மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர் கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

நுவரெலியா மாநகரசபைக்கு முன் பாக இந்தப் போராட்டம் சர்வதேச தேயிலை தினமான கடந்த புதன் கிழமை முன்னெடுக்கப்பட்டது.

"தேயிலை உற்பத்தி மற்றும் நுகர்வை நிலைநிறுத்துவதும், பசி மற்றும் வறுமைக்கு எதிரான போராட்டத்தில் அதன் முக்கியத்து வம் குறித்த விழிப்புணர்வை ஏற்ப டுத்துவதும்" தேயிலைத் தினத்தின் நோக்கம் என ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடுகிறது.

மலையகத் தமிழர்கள் என்ற எங் கள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும், எங்களுக்கு மாடி வீடு கள் வேண்டாம். மலையகத் தமிழ் மக்கள். தோட்டத் தொழிலாளர்க ளுக்கு காணியுடன் கூடிய ஒற்றைக் குடும்ப வீட்டுத்திட்டத்தையே செயற் படுத்தவேண்டும். எமது பிள்ளை களின் கல்வி நிலையை மேம்ப டுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர் கள் தெரிவித்தனர். (ச-இ)



# நடிகை மாலினி காலமானார்

கொழும்பு, மே 25

சிங்கள திரையுலகின் பிர பல நடிகையான மாலினி பொன்சேகா நேற்று சனிக் கிழமை காலமானார்.

மாலினி பொன்சேகா உடல் நலக் குறைவு காரணமாக கொழும்பில் உள்ள தனி யார் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நிலை யில் தனது 78ஆவது வய தில் காலமானார்.

சுமார் 70 வருடங்களுக்கு மேலாக அவர் கலை மற் றும் சினிமாவில் தடம்பதித் ததுடன் "இலங்கை சினிமா வின் ராணி" எனவும் அழைக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ச-இ)

# நாடாளுமன்ற வளாகத்தில் சட்ட ஆலோசனைப்பிரிவு

கொழும்பு, மே 25

நாடாளுமன்ற நடை முறைகள், சம்பிரதா யங்கள் பற்றித் தெரி யாத நாடாளுமன்ற உறுப்பினர்கள், உத்தி யோகத்தர்களின் நன்மை கருதி நாடா ளுமன்ற வளாகத்தி னுள் சட்ட ஆலோச னைப்பிரிவு ஒன்றை உருவாக்குவதற்கு நாடாளுமன்ற ஆலோ சனைக்குழு தீர்மானி த்துள்ளது. நாடாளுமன்ற ஆலோ சனைக்குழுவின் தலைவர் ஜெகத் விக்கி ரமரத்ன தலைமை யில் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தி லேயே, இந்தத் தீர்மா னம் எடுக்கப்பட்டுள் ளது. (ச-25,6)



# உலக அழகிப்போட்டிக்கு இலங்கைப்பெண் தெரிவு

கொழும்பு, மே 25

இலங்கையைச் சேர்ந்த அநுடி குணசே கர, இந்தியாவின் ஹைதராபாத் நகரில் நடைபெறும் 72ஆவது உலக அழகிப் போட்டியின் இறுதிச்சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இறுதிச்சுற்றுக்குத் தெரிவுசெய்யப்பட் டுள்ள 20 பேரில் ஆசிய அழகிகளில் அவர் முதலிடத்திலுள்ளார்.

உலக அழகிப்போட்டியின் இறுதிச்சுற் றுக்கு இலங்கை அழகி ஒருவர் தெரிவு செய்யப்படுவது இதுவே முதல்முறை யாகும். (ச-41-6)

# வெளிநாட்டுக்கடன் சட்டமூலம் சபாநாயகரால் கையொப்பம்

கொழும்பு, மே 25

வெளிநாட்டுக்கடன்கள் (நீக்குதல்) சட்டமூலத்தில் கையொப் பமிட்டு அதைச் சான்றுபடுத்தினார் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன.

வெளிநாட்டுக்கடன்கள் சட்டமூலம் தொடர்பில் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தைத் தொடர்ந்து, குழு நிலையில் குறித்த சட்டமூலம் ஆராயப்பட்டது. இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மூன்றா வது மதிப்பீட்டையடுத்து இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத் தில் நிறைவேற்றப்பட்டது. அதகற்மைய இந்தச் சட்டமூலம் 2025 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க வெளிநாட்டுக் கடன்கள் சட்டமாக நடைமுறையாவது உறுதியாகியுள்ளது. (ச-25)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
திங்கட்கிழமை- வைகாசி 12
26.05.2025
சுபநேரம் : 11.52- 01.22
ராகுகாலம் : 07.22 - 08.22

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம்

22 . 06 . 1942



மறைவு

18 . 05 . 2025

## திருமதி நகுலேஸ்வரன் இராணிமலர்

யாழ். ஏழாலையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Mulheim, Dortmund ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நகுலேஸ்வரன் இராணிமலர் அவர்கள் கடந்த (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா நகுலேஸ்வரன் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற யுவராஜன் (ஜேர்மனி), பத்மாராணி (நோர்வே), வரதராஜன் (நோர்வே), சுசிராணி (ஜேர்மனி), விமலராஜன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிக்கோல், கோபி, லோஜினி, பிரபாகரன், ஜெயஷாளினி ஆகியாரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, பரமேஸ்வரி, கந்தசாமி, திருஞானசம்பந்தர், இந்திரன், பாலச்சந்திரன். ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பவளம், காலஞ்சென்றவர்களான கமலாதேவி, ,ராஜேஸ்வரி மற்றும் அம்பிகாராணி யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துணியும். ஜக்குலின்-பஸ்கால், ஷாளினி- கேரிட், நிஷானி, நேசகுமார், சஜித், மிலேன்,
டிலானி, அனுஜன், பிரிந்தியா, பிருந்துஜன், அஸ்வின் அக்ஷரா, அர்வின் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், ஏலியாஸ், அமிலியா, நேகா, றியா, லியோனல் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நடைபெறும் நாளில் நாளை (26.05.2025) திங்கட்கிழமை அவர் வாழ்ந்த பூர்வீக இடமான ஏழாழையில் பிற்பகல் 12.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை மலர் அஞ்சலி செலுத்தப்படும் என்பதனையும் அறியத்தருகிறோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**தொடர்புகளுக்கு:**

பத்மாராணி - மகள் - +47 452 533 85
வரதராஜன் - மகன் - +47 977 376 02
சுசிராணி -மகள் - +49 176 804 043 61
விமலராஜன் - மகன் - +49 176 209 005 74

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS30130) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு மற்றும் காணி விற்பனைக்கு

காங்கேசன் துறை தெற்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிற்கு அருகாமையில் KKS வீதியில் இருந்து 700m தூரத்தில் இரண்டு பரப்புடன் கூடிய வீடு, மூன்று பரப்புடன் கூடிய வீடு மற்றும் இரு இரண்டு பரப்பு காணிகள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: **070 438 3910**

## வீடு வாடகைக்கு உண்டு

மாவிட்டபுரம் சீமெந்து தொழிற்சாலையில் இருந்து 300m தூரத்தில் வீடு வாடகைக்கு உண்டு.

(3 அறைகள், 2 Hall மற்றும் Kitchen)

தொடர்புகளிற்கு: **077 3614 638**

## குடியிருப்புக் காணி விற்பனைக்கு

கிளிநொச்சி கனகபுரம் 5ம் பண்ணையில் அமைந்துள்ள 1/2 ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு. 1/4 ஏக்கர் வீதம் இரண்டு துண்டுகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். கட்டுக் கிணறு, மலசலகூடம் மற்றும் மின்சார இணைப்புக்கள் உள்ளன.

தொடர்பு: **078 499 7699**

## காணி விற்பனைக்குண்டு

இருபாலை சந்திக்கும் இராசபாதை றோட்டுக்கும் இடையில் (அன்னை திரேசா அருகில்) 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: **076 297 7078**

## மேல் வீடு வாடகைக்கு

நீராவியடியில் 3 அறை மாடி வீடு மட்டும் வாடகைக்கு உண்டு

தொடர்பு: **070 414 4877**

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| ➢ வாடிக்கையாளர் சேவை அதிகாரி | : 0772741206 |
| ➢ Midwife | : 0773618559 |
| ➢ Room Boy | : 0761313000 |
| ➢ Marketing Coordinator | : 0772741206 |
| ➢ Photocopy ,Typing,Printing | : 0773138881 |
| ➢ கோத்து றைஸ் போடுபவர் | : 0774078235 |
| ➢ Marketing Executive | : 0771587186 |
| ➢ பணிப்பெண் | : 0754702518 |
| ➢ Business Advisor (Online/Part Time) | : 0779969661 |
| ➢ Receptionist (Jaffna) | : +41763254120 |
| ➢ Sales Executive(BDM) | : 0771298168 |
| ➢ CCTV Camera பொருத்துனர் | : 0775527099 |
| ➢ All-Rounder Staff | : 0760709751 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு: **dewmasweb.com**
வேலையாட்கள் தேவையா: **0760984532**
**DEWMAS**, 51, Amman Road, Nallur, Jaffna

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
09 . 11 . 1939

மறைவு
15 . 06 . 2023

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் ஆறுப்பிள்ளை நடராசா
**(இராமகிருஷ்ணன் - ஓய்வுபெற்ற அதிபர்)**

திதி: திரியோதசி - 25.05.2025

தலைவனாய் தரணி போற்றும் தந்தையாய்
நிலந்தனிலே என்றும் நிறைவோடு வாழ்ந்தவரே
நன்றாய் வளர்த்து நல்வழிகள் காட்டியெம்மை
வாழவைத்த தெய்வமே
என்றினி உங்கள் எழில் வதனம் காண்போம்.

**பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.**


**இல. 78, லக்சபான வீதி,
மகாறம்பைக் குளம், வவுனியா.**

(CS/55257) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 05 . 1943

மறைவு
23 . 05 . 2025



### நாகலிங்கம் மகேந்திரன் (கிச்சான்)
**(நிலஅளவையாளர்)**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி, மலேசியா, புறாணை, கொழும்பு தற்பொது நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் மகேந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் (23.05.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-அன்னபூரணி தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா-தங்கம் தம்பதியின் அன்பு மருமகனும், பொன்னம்மா அவர்களின் அன்பு கணவரும், உமாகணேசன், உமாசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான புஷ்பகாந்தி, திருச்செல்வி, இராஜேந்திரன், பாலேந்திரன் மற்றும் திருமதிகாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் அற்புதவல்லி, இராஜேஸ்வரி காலஞ்சென்றவர்களான பிறைசூடி, புவனேஸ்வரி மற்றும் நாகேஸ்வரன், அருணோதயம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (26.05.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்
பொன்னம்மா, உமாகணேசன்
077 628 7497**

**நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
03 . 08 . 1960

இறப்பு
22 . 05 . 2025



### சந்திரபாலசிங்கம் இரத்தினேஸ்வரி

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் கோகுல வீதி, கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சந்திரபாலசிங்கம் இரத்தினேஸ்வரி அவர்கள் கடந்த (22.05.2025) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கனகம்மா தம்பதியினரின் மகளும், சந்திரபாலசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், சுதர்சினி, தர்சினி, பாலகிருஸ்ணன், காயத்திரி, நர்மதா, அனோஜ், நிஜோஜா, பிரசாந் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசேந்திரசிங்கம், சிவசெல்லயா, தனுஜா, கௌரிராஜ், ஜெசிக்கா ஆகியோரின் பாசமிகு மருமகளும், சிந்துயன், சஜீனா, சந்தியா, கயந்தன், அபினேஸ், அபிநயா, யனிஸ், சோபிகா, கௌசிகா, சிகித்தா, சத்விகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2025) திங்கட்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக முற்பகல் 11.30 மணியளவில் கோண்டாவில் கலைவாணி வாழ்மக்கள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்
077 849 4485**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் இருந்து 100m தூரத்தில் கட்டப்பிராயில் 4 பரப்பும் 3 குழியும் வீட்டுடனான காணி விற்பனைக்கு உண்டு.

076 330 9761
WhatsApp: +1 905 923 6664

## G.C.E.(O/L) தகைமையுடன் லண்டன்(UK) செல்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு

100% உத்தரவாதம்

- IELTS தேவையில்லை,
- குறைந்த கட்டணத்தில் லண்டன் செல்வதற்கான ஏற்பாடுகளை எமது நிறுவனம் செய்து கொடுக்கிறது.
- 3 நாட்கள் அதாவது மிகக்குறுகிய காலத்தில் Offer Letter- பல்கலைக்கழக அனுமதி பத்திரத்தை பெற்று விசா ஆலோசனையும் வழங்குகிறது.

உங்கள் தகைமையுடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள்....!

New Zealand, Malaysia, Singapore, Italy, France

போன்ற நாடுகளுக்கு துரித கதியில் விசிட் விசா மற்றும் உயர்கல்வியை தொடர Study Visaவை பெற இன்றே தொடர்புகொள்ளுங்கள். ஆங்கிலம் சாதாரணமாக பேசத்தெரிந்தால் போதுமானது. Payment After Visa

Family & Single Visit Visaவுக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

3 வாரங்களில் விசாக்கள்

0771828215

American College of Applied Studies Pvt Ltd

## அகில இலங்கை இளங்கோ கழகம்
புலமை ஒலி - 2025
சிலப்பதிகார விழா

திருமதி வசந்தகுமாரி கதிரவேற்பிள்ளை அரங்கு
25.05.2025 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணி

தங்கராசா வைகுந்தன் அவர்களால் நிறுவப்பட்ட சபாபதிப்பிள்ளை தங்கராசா ஞாபகார்த்த சமூகப் பணிக்கான உயர்விருது பெறுபவர்
திரு. வடிவேலு சந்திரசேகரம்

திருநாவுக்கரசு நகுலன் அவர்களால் நிறுவப்பட்ட கழக உறுப்பினர்களுக்கான சிலம்பிசை விருது பெறுபவர்கள்
த. குருபரன்
க. வாணிமுகுந்தன்

**வரவேற்பு நடனம்**
க.வைஷாலி, இ.கவினயா, கு.அஸ்ணவி, பி.பிரவீனா
(நெறியாள்கை, திருமதி. குமணன் லோஷனா)

**மங்கல விளக்கேற்றல்**
திரு. திருமதி சிவகுமாரசாமி கல்யாணி தம்பதிகள்
(பிரதம நிறைவேற்றுப்பொறுப்பதிகாரி, வேலும்மயிலும் அறக்கட்டளை)
திரு.திருமதி.அருண்பிரசாந் உஷாந்தி தம்பதிகள்

**கடவுள் வாழ்த்து**
திரு.சி.பிரதீபன் (ஆசிரியர். யா/ஹாட்லிக் கல்லூரி)

**கழகக்கீதம்**

**வரவேற்புரை**
திரு.வே.சுரேஸ்வரன்

**தலைமையுரை**
திரு.ம.பிரதீபன் (அரச அதிபர். யாழ்ப்பாணம்)

**தொடக்கவுரை**
கௌரவ ச.சுகிர்தன் (முன்னாள் உறுப்பினர் ...மாகாண சபை)

**கௌரவிப்புரை**
திரு.சி.பூபாலசிங்கம் (உதவிக்கல்விப்பணிப்பாளர் ...ழ், மன்னார் வலயம்)

**நிறைவுரை**
திரு.ந.சிவலிங்கம் (ஆலோசகர், அகில இலங்கை இளங்கோ கழகம்)

**நன்றியுரை**
செல்வன் ஜெ.ஜொய்சன்

நிகழ்ச்சித்தொகுப்பு
திரு.வேல் நந்தகுமார்
திரு.ந.பிரதீபன்
உபஅதிபர் யா/வடமராட்சி இந்து மக... கல்லூரி

இளங்கோ கழக இளைஞர் அணியி... வழங்கும்
சி.கிருஷ்ணாகரனின் நெறியாள்... கயில்
"தமிழ் அமுதம்"
(இசை விருந்து)

**வழக்காடு மண்டபம்**
"குற்றக் கூண்டில் சிலப்பதிகார ...லைவியர்"
இலக்கிய நீதிபதி கம்பவாரிதி இலா... ஜெயராஜ்

வாதிகள்
பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன்
அ.வாசுதேவா

...வாதிகள்
வலம்... ந.விஜயசுந்தரம்
த... ருணாகரன்

விளம்பர அனுசரணை
புலோலி கல்வி நிலையம் உபயகதிர்காமம் புலோலி

## AUSTRALIAN VISA

Visitor Visa / Student Visa / Partner Visa / Parents Visa

Contact us: HOTLINE
076 622 8891, 074 314 3995
Australian Migration Consultants
41 1/3, George R De Silva Mw, Colombo 13
WhatsApp: 0766228891 / 0726318444
Email: sl.austvisa@gmail.com

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் ஊரெழு பிள்ளையார் கோவிலிற்கு அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 327 6462
077 711 5438



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற

## அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு :- 077 281 1234

(CS/2177) J-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உடுவில் டச்சு வீதியில்
8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- உடுவில் மகளிர் கல்லூரி அருகாமையில் 150m
- சிறந்த சூழல்
- நல்ல தண்ணீர்
- காணியினுள் பழையவீடு ஒன்று உள்ளது.
- மருதனார் மடம் சந்தை 1Km
- தரகர் தேவையில்லை
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

077 711 5438, 077 327 6462

(CS/58080) J-1

## காணி விற்பனைக்கு

யாழ் சுண்டுக்குளி மோரிஸ் ஒழுங்கையில் புதிதாக பிரிக்கப்பட்ட காணித் துண்டுகள்

- கொழும்புத்துறை சாலைக்கு மிக அருகில்
- சிறந்த சூழல்
- அகலமான சாலை - 15 அடி & 20 அடி
- UDA அங்கீகரிக்கப்பட்டது
- உடனடி கட்டிடம் சாத்தியம்
- 1.4 பரப்பு X 6* துண்டுகள் (1ப 7கு)
- 1.33 பரப்பு X 2* துண்டுகள் (1ப 6கு)
- ஸ்ட்ரீட்லைன் சான்றிதழ்
- உரிமைச் சான்றிதழ்
- கையலிக்கபடாமைக்கான நற்சாட்சி சான்றிதழ்
- மின் இணைப்புக்கான அணுகல்

சில துண்டுகள் ஏற்கனவே விற்கப்பட்டுள்ளன.
தரகர்கள் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:
077 711 5438, 076 156 2983

## வீடு / காணி விற்பனைக்கு

ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்

வீடு மற்றும் காணி விற்பனைக்கு உண்டு. 2-3/4 பரப்பு

What's App
0717 563 730

## உடனடி வேலைவாய்ப்பு

பிரபல்யமான கம்பனிக்கு வட மாகாணத்திற்கு முகாமையாளர். அலுவலக உத்தியோகத்தர் உடன் தேவை

தொடர்பு: 074 183 5645

## விற்பனைக்கு உண்டு

நோயாளர் தள்ளு வண்டி (wheel Chair) விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 129 9602

## மணமகள் தேவை

1993, இந்து, றோஹினி , ENGINEER
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - AUSTRALIA
மணமகன் பதிவு இல: 11599.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## மணமகள் தேவை

2001, இந்து, பூசம் , CIVIL ENGINEER
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - AUSTRALIA
மணமகன் பதிவு இல: 11517.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## காணி விற்பனைக்கு

உசன் கஜகேணி பிள்ளையார் கோவில் வீதி, தொந்தியா வேட்டையில் பயன்தரும் தென்னை மரங்களுடன் காணி விற்பனைக்கு உண்டு.

076 072 0341

(CR/0066) J-1

## மணமகள் தேவை

1995, இந்து, உத்தரம் , CIVIL ENGINEER
பூர்வீகம் - பருத்தித்துறை, வதியுமிடம் - AUSTRALIA
மணமகன் பதிவு இல: 11331.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## பணியாளர்தேவை

கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான நிறுவனம் ஒன்றிற்கு பொதியிடல் பணியாளர்கள் தேவை பெண்பிள்ளைகள் விரும்பத்தக்கது வயதெல்லை 30 - 40

தொடர்புகளுக்கு:
077 262 2988

## 7 ஏக்கர் காணி

தென்னந் தோட்ட காணி விற்பனைக்கு

மதுரங்குளிய [ 7 ஏக்கர்ஸ் ]

ஒரு ஏக்கர் LKR 55 Laksh

மொத்தம்
LKR 38,500,000

மொத்தமாக 7 ஏக்கர்
2 பண்ணை வீடுகள்
250+ தென்னை மரங்கள்
40 + கொய்யா மரங்கள்



1000-1800 தென்னையின் வருமானம்
10-25 KG கொய்யா வருமானம்
மோட்டார் மற்றும் நீர் குழாய் இணைப்பு கொண்ட குழாய் கிணறு
எல்லைச் சுவரு

Call: 076 3641872 / Whats App +974 33337935


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விருத்தப் பாமழை ஆயிரம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 25

அருட்பணி செ.அன்புராசா அடிகளாரின் 'விருத்தப் பாமழை ஆயிரம்' கவிதை நூல் வெளியீட்டு விழா யாழ். பிரதான வீதியில் உள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்ச்சிக் கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுநிலை ஆசிரியர் சோ.பத்மநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-25-9)

**காணி விற்பனைக்குண்டு**

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077 836 3050
077 305 8782

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 25 . 07 . 1950



மறைவு 23 . 05 . 2025



தோற்றம் 14 . 06 . 1980

எமது சங்கப் பணியாளர் திரு. இராயோந்திரம் சாய்ராஜ் அவர்களின் அன்பு தந்தையார், அன்புச் சகோதரி

**சோமசுந்தரம் இராஜேந்திரம்**

**இராஜேந்திரம் உமாதேவி**

அவர்கள் (23.05.2025) இறைபதம் அடைந்ததையிட்டு அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம் யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து) திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 09 . 1995



மறைவு 21 . 05 . 2025

**சந்திரராசா விதுஜாம்பாள்**

துர்க்காபுரம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரராசா விதுஜாம்பாள் (யூனியன் கல்லூரி பழைய மாணவி) அவர்கள் கடந்த (21.05.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சந்திரராசா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் கமநல அபிவிருத்தி திணைக்களம்)- கௌரியம்பாள் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் பொன்னுச்சாமி, நல்மணி ஆகியோரின் பேர்த்தியும் உருக்குமணியின் அன்புப் பேர்த்தியும் செந்தில்வேல், கீதாஞ்சலி (லண்டன்), காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் கமலாதேவி ஆகியோரின் மருமகளும் துர்க்கா, துசியந்தன் (லண்டன்), சஜீவ், தினேஸ், தர்சிகா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவராசா நகுலாம்பாள் (டென்மார்க்), தயாகரன் மனோகராம்பாள், கோவர்த்தனராசா (கடவுள் சந்நிதி உடுவில்), தவயோகராசா (பிரதேசசபை-சுன்னாகம்), திசாஜினி, சிவயோகராசா தர்சினி ஆகியோரின் பெறாமகளும் ஆதீசன், அபிஷா (டென்மார்க்), நிர்த்தனன், லவன்யா, வித்தகி ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (25.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துர்க்காபுரம்,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
[illegible]

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 12 . 01 . 1952



மறைவு 23 . 05 . 2025

**வீரகத்தி பொன்னுத்துரை**

நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவிலைப் பிறப்பிடமாகவும் கலைமன்றவீதி, புலோலி வடக்கினை வதிவிடமாகவும் கொண்ட வீரகத்தி பொன்னுத்துரை அவர்கள் நேற்று முன்தினம் (23.05.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி-தெய்வானை தம்பதியின் அருமை மகனும், காலஞ்சென்ற நாகதம்பி மற்றும் அன்னபூரணம் தம்பதியின் அன்பு மருமகனும், தங்கேஸ்வரியின் அன்பு கணவரும், தேவகி (ஆசிரியர், யா/புற்றளை ம.வித்தியாலயம்), வாசுகி (ஆசிரியர்.யா/சென்தோமஸ் றோ.க.த.க.மா), சாரங்கன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் குககாந்தன், அருட்செல்வம் ஆகியோரின் அன்பு மாமனும் பரமேஸ்வரியின் அருமைச் சகோதரனும் கந்தசாமி, செல்லம்மா, நேசரத்தினம், நேசமணி, குமரேசு, மயில்வாகனம், புஸ்பலீலா, பத்மநாதன் ஆகியோரின் மைத்துனரும் புஸ்பலதா, ரவிக்குமார், பிறேமலதா, கயல்விழி, இளங்கோ ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும் ஆதிபன், ஆகிசன், ஆருத்ரா, தட்சகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2025) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைமன்ற வீதி,
புரோலி வடக்கு,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்
076 754 5221

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 04 . 1956



மறைவு 24 . 05 . 2025

**சரவணமுத்து சந்திரராசா**

(ஓய்வு நிலை முகாமைத்துவ உதவியாளர்-தென்மராட்சி)

சாவகச்சேரி பெரியமாவடியைப் பிறப்பிடமாகவும் அல்லாரை தெற்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து அவர்கள் நேற்று (24.05.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து-இராசம்மா தம்பதியின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் பரமேஸ்வரி தம்பதியின் அன்பு மருமகனும், ஜெயராணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் சிவராசா, காலஞ்சென்ற வரதராசா மற்றும் அற்புதராணி, கௌரீசன் (ஆசிரியர், கிளி/ பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சகுந்தலாதேவி, காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் சிவலதா (ஆசிரியர். கிளி/பளை R.C.T.M.S), ஜெயக்குமார், ஜெயலலிதா, பாலகுமார், லிபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் யதீசன் (முகாமைத்துவ உதவியாளர், நீதவான் நீதிமன்றம்-மட்டக்களப்பு), யபோசன் (ஆசிரியர் சிலாபம் வடிவாம்பிகை இந்துக் கல்லூரி), சுஹேசினி (பொறியியலாளர்-கொழும்பு), காருசன் (ஆசிரிய பயிறுரை- மட்டக்களப்பு கல்வியற் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கஜானன், சாம்பவி, தர்மிகா, பிறைமினி ஆகியோரின் பெரியப்பாவும் சாளினி, நாகபூஷனி, செவ்வேன், மயூரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக எறியாள்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்லாரை தெற்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 365 6907

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# இ.போ.ச. விபத்து
## ஒருவர் பலி; 12 பேர் காயம்

மட்டக்களப்பு, மே 25

கொழும்பு - வெள்ளவாய பிரதான வீதியில் வெலிஹாரப் பகுதியில், மட்டக்களப்பு பாசிக்குடாவிலிருந்து காலி நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் ஒன்று, முன்னால் சென்றுகொண்டிருந்த டிப்பரின் பின்பகுதியில் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது.

இதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 12 பேர் காயமடைந்த நிலையில் தங்காலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பில் தங்காலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)



# துமிந்தவுக்கு விளக்கமறியல்

கொழும்பு, மே 25

தங்கமுலாம் துப்பாக்கி விவகாரத்தில் கைதுசெய்யப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் துமிந்த திசாநாயக்க எதிர்வரும் மே 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கல்கிஸ்ஸை நீதிவான் முன்னிலையில் நேற்று சனிக்கிழமை காலை அவர் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தத் துப்பாக்கி கடந்த செவ்வாய்க்கிழமை கண்டுபிடிக்கப்பட்டதுடன் இந்தச் சம்பவம் தொடர்பாக இரண்டு பெண்கள் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின்போது தெரியவந்த தகவல்களின் அடிப்படையில் துமிந்த திசாநாயக்க கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# இலஞ்சம் பெற்ற அதிகாரிகளுக்கு 28 வருட சிறை



கொழும்பு, மே 25

இலஞ்சம் பெற முயன்ற இரண்டு கலால் திணைக்கள அதிகாரிகளுக்கு 28 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு ஹெரோய்ன் வைத்திருந்த இரண்டு பெண்களைக் கைதுசெய்த குறித்த அதிகாரிகள் இருவரும், அந்தப் பெண்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யாது, நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, இலகுவாகத் தப்பித்துக்கொள்ள வழிசெய்துள்ளனர்.

அதற்காக குறித்த கலால் திணைக்கள அதிகாரிகள் இருவரும் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுள்ளனர்.

இந்தநிலையில் இருவருக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டநிலையில், அவர்களுக்குத் தலா 28 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ரூபவாஹினியுடன் சீனா ஒப்பந்தம்

கொழும்பு, மே 25

இலங்கை அரச தொலைக்காட்சி ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கும் சீன மக்கள் குடியரசின் சோங்கிங் ஒளிபரப்புக் குழுவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே நீண்டகால நட்புறவு மற்றும் பரஸ்பர புரிதலை வளர்த்து, ஒத்துழைப்பை வலுப்படுத்தி, ஊடகத்துறையில் பயிற்சி வாய்ப்புகளைப் பரிமாறிக்கொள்ளும் நோக்கில் இந்த ஒப்பந்தம் முன்னெடுக்கப்படவுள்ளது. அந்தவகையில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு 21,439



கொழும்பு, மே 25
நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 21,439 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
10 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, மட்டக்களப்பு, கண்டி, காலி, மாத்தறை, திருகோணமலை, கல்முனை மற்றும் குருணாகல் உள்ளிட்ட பிரதேசங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். (ச-இ)

# குருதிக்கொடை


யாழ்ப்பாணம், மே 25
சுன்னாகம் புனித அந்தோனியார் இளையோர் மன்றத்தின் ஏற்பாட்டில், இரத்ததான நிகழ்வு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் குருதி வங்கியால் இந்த முகாம் முன்னெடுக்கப்படவுள்ளது. குறித்த மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைகளின்போது அதிகமாக குருதி தேவைப்படுவதனால்
குருத்தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய குருதிக்கொடையாளர்களை முன்வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-25)

# பஞ்சாப்பைத் தோற்கடித்து விடைபெற்றது டெல்லி

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்றஆட்டத்தில், முஸ்டபிஷூரின் கட்டுக்கோப்பான பந்துவீச்சும், ரிஷ்வியின் அதிரடியும் கைகொடுக்க பஞ்சாப்பைத் தோற்கடித்தது டெல்லி.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் 8 விக்கெட்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஸ்ரேயஸ் 53 ஓட்டங்களையும், ஸ்ரொய்னிஸ் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் முஸ்டபிஷூர் ரஹ்மான் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.
பதிலுக்குக் களமிறங்கிய டெல்லிக்கு அனைத்து வீரர்களும் காத்திரமான பங்களிப்பை வழங்கினார்கள். ராகுல் 35, டுபிளஸி 23, கருண் நாயர் 44 என அனைவரும் இணைந்து இன்னிங்ஸை கட்டமைத்துவிட, ரிஷ்வி 25 பந்துகளில் 58 ஓட்டங்களைக் குவித்து அணியை வெற்றிபெற வைத்தார். (ம)






## வேலையாள் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையத்திற்கு வேலையாள் தேவை
விற்பனையாளர் (ஆண்/பெண்)
கணக்கு பதிவாளர் (ஆண்/பெண்)
தொடர்பு - 077 620 5628

## விற்பனைக்கு



தொடர்புகளுக்கு:
078 658 2166, 077 212 8034

## காணி விற்பனைக்கு

நீர்வேலி-புன்னாலைக்கட்டுவன் பிரதான வீதியில் (கார்பட் வீதி) அமைந்துள்ள 03 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

(கடைத்தொகுதிகள், மண்டபங்கள் மற்றும் வீடுகள் அமைப்பதற்கு உகந்த வசதிகளுடன் கூடிய காணி)

077 707 9041, 077 612 7268

## வல்வை முதியோர் இல்லம்

வீட்டுச் சூழலில் கனிவு நிறைந்த உபசரிப்புடன் சுகாதாரமாகத் தயாரிக்கப்பட்ட நிறை உணவு வழங்குகின்ற வல்வை முதியோர் இல்லம் புதிய முதியவர்களை இணைப்பதற்கு தயாராக உள்ளது.

இல்லத்தில் இணைய விரும்பும் முதியவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பெண் முதியோர் பராமரிப்பாளர் வேலைக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி
077 810 6857 / 077 154 2067 / 021 226 5551
www.valvaieldershome.com

## STUDY IN INDIA

**இந்தியாவில்
உயர் கல்வி, பட்டம்
பெற ஓர் அரிய வாய்ப்பு
கல்வியாண்டு 2025**

1. இலங்கை மாணவர்கள் சிறப்பு கட்டணத்துடன் உயர்கல்வியினை தொடரலாம்.
2. பகுதி நேர வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
3. நேர்முக தேர்வின் போது சிறந்த முதல் 100 மாணவர்களுக்கு விசேட கட்டண சலுகை வழங்கப்படும்.
4. அன்றைய தினம் பதிவுகளை மேற்கொள்பவர்கட்கு பல்கலைக்கழக அனுமதி சேர்க்கை கடிதம் வழங்கப்படும்.

O/L -6 பாடங்கள், A/L -3 படங்கள் சித்தி பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

Tamil/English Medium
BA (English) BA(Tamil)
B.Ed (Primary/General)
BBA (General/ Special)
MA( Master in Arts)
Med (Master in Education)
MBA (General/Special)
B.Sc (AI)

Contact:
AMERICAN COLLEGE OF HIGHER STUDIES>
COLOMBO/JAFFNA.
Web: www.achs.lk
Tel: 0766852529/0775704893 /0742349120


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னச்சாமிக்குருக்கள் சண்முகலிங்கம் ஐயர்**
(ஆதீனகர்த்தா ஸ்ரீவீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்)
திதி : வைகாசி அபரபக்க சதுர்த்தசி

தோற்றம் 15.01.1938 — மறைவு 21.05.2020

அன்பாலும் பண்பாலும் எம்மை
அரவணைத்து
நல்வழிப்படுத்திய எங்கள்
குடும்ப விளக்கு!
வீரமாகாளியம்மன் காலடியில்
சரணடைந்து
ஆண்டுகள் ஐந்து கடந்தாலும்
உங்கள் பிரிவுத்துயர் நினைவுகள்
இன்றும் எம் மனதில்
நித்தமும் நிற்கிறதே!

இல 39, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டு இறைச்சியுடன் ஒருவர் கைது!

*யாழ்ப்பாணம், மே 25*

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில், சட்டவிரோத மாட்டு இறைச்சியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருதங்கேணி புதுக்காட்டு வீதியூடாக செம்பியன்பற்று பகுதிக்கு ஓட்டோவொன்றில் மாட்டு இறைச்சியைக் கடத்திச் சென்றபோதே அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

# ‘போதைவஸ்துகளற்ற எதிர்காலம்’ வடமுனையைச் சுற்றி நடைபவனி

வவுனியா, மே 25

சமூக சேவகரும், உள்ளூர் துடுப்பாட்டப் போட்டி வர்ணனையாளருமான வெ.தேவநாயகத்தின் (சமயபுரம் றொஷான்) ஏற்பாட்டில், ‘போதைவஸ்துகளற்ற எதிர்காலத்தை நோக்கி’ எனும் தொனிப்பொருளில் வடமுனையைச் சுற்றி நடைபவனி முன்னெடுக்கப்படவுள்ளது.

நடை பவனியானது, நாளை திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலத்தில் ஆரம்பித்து கனகராயன்குளம் வரை நடைபெறும். நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை கனகராயன்குளம் மகாவித்தியாலத்தில் ஆரம்பித்து கிளிநொச்சி வரை நடைபெறும். 28ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலத்தில் ஆரம்பித்து சாவகச்சேரி வரை நடைபெறும். 29ஆம் திகதி வியாழக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து பருத்தித்துறை வரை நடைபெறும். 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆரம்பித்து காங்கேசன்துறை வழியாக முற்றவெளியை அடையும். 3 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நெளுக்குளம் மகாவித்தியாலத்தில் ஆரம்பித்து வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நிறைவுறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-25)

# கலையரங்கு

*யாழ்ப்பாணம், மே 25*

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில், மாதாந்த கலையரங்கு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இளங்கலைஞர்மன்ற மாணவர்களின் குழு நடனமும், தீபம் இசைக் கல்லூரி மாணவர்களின் குழு இசையும், ஸ்ரீமதி சிவரஞ்சனி ரமணசர்மாவின் இசையரங்கும் அணிசெய் கலைஞர்களின் இசைமீட்டலுடன் இனிதே இடம்பெறவுள்ளது. (ம-25)

## நிமோனியாவால்...

ளார். பாலன் கிட்டிணன் (வயது - 75) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 22ஆம் திகதி சுகவீனமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-27-20)

## காணி...

கிழமை இடம்பெறவுள்ளது என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வெற்றிலைக்கேணி ரம்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று காலை 9 மணியளவில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. எனவே, அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தலால் பாதிக்கப்படும் பொதுமக்களும், இது தொடர்பான ஐயப்பாடுகளைக் கொண்டவர்களும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளமுடியும்.

அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் பிரதமர் ஹரிணி நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடத்தியிருந்தார். அந்தக் கலந்துரையாடலில் எந்தக் காத்திரமான தீர்மானங்களும் எட்டப்படாத காரணத்தால், அடுத்ததாக எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இந்த ஆலோசனைக்கூட்டம் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## கிளிநொச்சி...

முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர் என்றும், இதற்கு தேசிய மக்கள் சக்தியினர் சிலரும் உடந்தை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இரவிரவாகக் கடைகளை அமைத்து, அந்தக் காணிகளை தமது ஆளுகைக்கு உட்பட்ட பகுதி என்ற ஆவணங்களைச் சட்டவிரோதமாகப் பெற்று, பின்னர் அந்தக் கடைகளை வாடகைக்கு விடும் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்றன. இந்தச் சட்டவிரோத ஆக்கிரமிப்பும் இத்தகைய ஒரு முயற்சியே என்று அதிகாரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அரச காணிகளில் அமைக்கப்பட்ட சட்டவிரோதக் கட்டுமானங்களை அகற்றும் நடவடிக்கையில் பூநகரி பிரதேசசெயலக அதிகாரிகள் ஈடுபட்டபோது, ஆக்கிரமிப்பாளர்கள் அவர்களைத் தாக்க முயன்றதுடன், தவறான வார்த்தைகளையும் பயன்படுத்தியுள்ளனர். அத்துடன், அதிகாரிகள் அடாவடித்தனத்தில் ஈடுபடுகின்றனர் என்ற பிம்பத்தை ஏற்படுத்தும் வகையில் காணொலிகளைப் பதிவு செய்து அவற்றைச் சமூக ஊடகங்களிலும் பரப்பியுள்ளனர். தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், உண்மையைத் தெரியாமல் அந்தக் காணொலிகளை (அதிகாரிகளைக் குற்றஞ்சாட்டும் காணொலிகள்) தமது சமூக ஊடகங்களிலும் பகிர்ந்துள்ளனர்.

இந்த ஆக்கிரமிப்புச் செயற்பாட்டில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக பொலிஸாரிடம் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மேலதிக நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம)

## சட்டவிரோதக்...

190 முறைப்பாடுகளில் சில கட்டுமானங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதன்படி, முன்வைக்கப்பட்டுள்ள 190 முறைப்பாடுகளும் 148 கட்டுமானங்கள் தொடர்பிலேயே முன்வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 12 முறைப்பாடுகள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய பல முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டுவருகின்றன. (அ-ம-26)

## அழைத்தது...

அழைப்புக்கு அமைய, இலங்கையின் சிறப்புக் குழு அமெரிக்காவுக்குச் சென்றுள்ளது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பரஸ்பர வரி விதிப்புத் தொடர்பில் அறிவித்ததைத் தொடர்ந்து, அந்த வரி விதிப்புகளைத் தவிர்ப்பதற்காக இலங்கை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. இது தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகள் அலுவலகத்தினருக்கும் இடையில் இணையவழிக் கலந்துரையாடல்கள் பல இடம்பெற்றன. இதைத் தொடர்ந்தே தற்போது இந்த நேரடிக் கலந்துரையாடலுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் குழுவினர் அமெரிக்காவுக்குப் பயணிப்பதற்கு முன்னர், ஜனாதிபதி அநுரவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. அமெரிக்கப் பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தையில் முன்னிலைப்படுத்த வேண்டிய நகர்வுகள் தொடர்பில் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## ஜே.வி.பி.யின்...

2007ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியான மஹிந்தவின் அரசாங்கத்தில் இருந்து ஜே.வி.பி.யினர் விலகி, பட்ஜெட்டைத் தோற்கடிக்க முயற்சித்தனர். அவர்களின் எண்ணப்படி அன்று பட்ஜெட் தோற்றிருந்தால் இன்று தமிழீழம் மலர்ந்திருக்கும் என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்த ராஜபக்ச அரசுடன் இணைந்திருந்த ஜே.வி.பி. 2007ஆம் ஆண்டில் அரசில் இருந்து விலகியது. மங்கள சமரவீர, சிறிபதி சூர்யாராய்ச்சி ஆகியோரும் விலகினார்கள். இதனால் அரசு பெரும்பான்மையை இழந்தது. அந்த ஆண்டில் கொண்டுவரப்பட்ட பட்ஜட்டை தோற்கடிக்க முயற்சி செய்தனர். அப்படி பட்ஜெட் தோல்வியடைந்திருந்தால் மஹிந்தவின் அரசு கவிழ்ந்திருக்கும். புலிகளை தோற்கடிக்க முடியாமல் போயிருக்கும். புலிகள் இன்னும் இருந்திருப்பார்கள். அவர்கள் வெற்றியும் பெற்றிருப்பார்கள். தமிழீழத்தையும் அடைந்திருப்பார்கள். ஏனெனில், புலிகள் அப்படியொரு பலத்தில்தான் இருந்தார்கள்.

இவ்வாறாக ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்தே, மஹிந்த அரசைக் காப்பாற்றுவதற்காக பிக்குகள் அப்போது என்னை நாடாளுமன்றதுக்கு அனுப்பினார்கள். அதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து கரு ஜயசூரிய தலைமையிலான குழுவினரும், ஜே.வி.பி.யில் இருந்து விமல் வீரவன்ஸ குழுவினரும் மஹிந்த அரசுடன் இணைந்ததால்தான் அரசு பெரும்பான்மையைத் தக்கவைத்தது. இதனால்தான் போரை வெற்றிகொள்ள முடிந்தது. இந்த வெற்றியைப் பெற்றுத்தந்த படையினர் என்றென்றும் கொண்டாடப்பட வேண்டியவர்கள். ஆனால், தற்போதைய அரசாங்கம் படையினரைக் கொண்டாடத் தேவையில்லை என்ற எண்ணத்தில் உள்ளது - என்றார். (அ-ம-75)

## 3,311...

செலவு விவரங்களைச் சமர்ப்பிக்கவில்லை என்று யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்ட உள்ளூராட்சிசபைகளில் ஒட்டுமொத்தமாக 3 ஆயிரத்து 519 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் 3 ஆயிரத்து 311 வேட்பாளர்கள் இதுவரை தமது செலவு விவரங்களைச் சமர்ப்பிக்கவில்லை. தேர்தல் செலவுகள் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய கால எல்லை எதிர்வரும் 27ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் முடிவடைகின்றது. எனவே, சட்ட நடவடிக்கைளைத் தவிர்க்கும் வகையில் வேட்பாளர்கள் செயற்படவேண்டும் - என்றார். (அ-ம-26)

## மாறுகிறது...

அமைச்சுகள், அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் உட்பட ஏனைய அரசகட்டமைப்புகளின்வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கிலேயே இந்த அமைச்சரவை மாற்றம் தொடர்பான ஆலோசனை நடத்தப்பட்டு வருகின்றது.

அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் அரச நிறுவனங்களின் உயர் பதவிகளிலும் பல்வேறு அதிரடி மாற்றங்களை மேற்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இதுதொடர்பான கோரிக்கைகளை அரசாங்கத்தின் மூத்த அமைச்சரான பிமல் ரத்நாயக்க உட்பட பலர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் முன்வைத்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் 25 இற்கும் குறைவான அமைச்சர்களுடனேயே இயங்கும் என ஜனாதிபதி அநுரகுமார கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கூறியிருந்தார். என்றாலும் 22 அமைச்சர்களுடனேயே அமைச்சரவை செயற்படுகிறது. இன்னமும் 3 அமைச்சர்கள் வரை நியமிப்பதற்கான சந்தர்ப்பம் அரசாங்கத்துக்கு உள்ளது. எனவே, புதிதாக அமைச்சுகளை உருவாக்கும் சாத்தியங்கள் காணப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம-26)

அறைகள் வாடகைக்கு

யாழ். கந்தர்மடம் மணற்தரை ஒழுங்கையில் அறைகள் வாடகைக்கு உண்டு. பெண்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 076 543 1835, 075 258 0710
077 038 5584

(CS/301 43) D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ் இந்து 1990 ஆண்டு பிறந்த ரோகினி நட்சத்திரமுடைய செவ்வாய் குற்றமில்லாத பாவம் 16 உள்ள 5' 11' உயரமுடைய கனடாவில் றோயல் வங்கியில் சொப்பையர் பொறியியளராக பணிபுரியும் கனடா பிரயாவுரிமையுடைய மணமகனுக்கு கனடாவிலுள்ளவர்களோ வேறு வெளிநாட்டிலுள்ளவர்களும் சரி தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: **077 976 1221**

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்புக் காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

Whats app:-

**+61 421 290 240**

(CS/56843) J-1

## வேலையாட்கள் தேவை

கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

- Labor
- Assistance Factory Manager
- Supervisor

தங்குமிடம், உணவு வழங்கப்படும். முன் அனுபவம் அவசியமில்லை. விருப்பமுடையவர்கள் தொடர்பு கொள்ளவும்.

Whatsapp only:

**077 777 9448**

## வேலையாட்கள் தேவை

வீட்டில் தங்கிநின்று வீட்டு வேலை செய்யக்கூடிய பெண்கள் தேவை.

இடம் கொழும்பு - கொட்டாஞ்சேனை மற்றும்

யாழ்ப்பாணம் - நிலாவரை

கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**077 774 3578**

## வேலையாட்கள் தேவை

நல்லூரில் இயங்கிவரும் முதியோர் இல்லம் ஒன்றிக்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

பராமரிப்பாளர் - ஆண்

துப்பரவு பணியாளர் - பெண்

வயதெல்லை - 35 - 50

விபரங்களுக்கு: **077 528 5213**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அருகில் உள்ள பொற்பதி வீதியில் இருந்து 100m தூரத்தில் மிகவும் அமைதியான வீடுகள் உள்ள இடத்தில் ஒன்றரை பரப்பு காணி விற்பனைக்குண்டு

**077 973 7152, 076 104 7398, 0044 789 753 0985 (UK)**

## *Digitec* நிறுவனத்தில் வேலை வாய்ப்பு

யாழ். மத்தியில் பணியாற்றக்கூடிய CCTV, PC Technician மற்றும் Electricians தேவை.

அனுபவம் வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை.

கவர்ச்சிகரமான சம்பளம்

**077 868 8517**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்நகரை அண்டிய பகுதியில் தங்கிநின்று சமையல் மற்றும் வீட்டுப்பராமரிப்பு வேலைகள் செய்வதற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை

தொடர்புகளுக்கு: **074 134 5831**

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

கட்டிடத்திற்கு தேவையான சகல இரசாயனப் பொருட்கள் (நீர்க்கசிவை தடுப்பது உட்பட) தற்போது குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு விலைக்கழிவு உண்டு.

தரம் குறைந்த போலிகளைக் கண்டு ஏமாறாதிர்கள்

**North and East Engineering**

**077 524 4177, 077 232 3000**

## விற்பனைக்கு

- இணுவிலில் காணியுடன், வீடு விற்பனைக்கு
- பிறவுன் வீதியில் அலுவலக பாவனைக்கு உகந்த கட்டிடம் வாடகைக்கு
- நாவற்குழியில் திருமணமண்டபம், உணவகங்கள் அமைக்க கூடிய வீதியோரமான காணி விற்பனைக்கு

தொடர்புகளுக்கு:

**077 957 4122** (Mohanaraj Arumainayagam)

## யாழ் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் அலுவலக உதவியாளர் தேவை

மேற்படி ஆலயத்திற்கு நித்திய அலுவலக உதவியாளர் தேவை

விருப்பமுடையோர் ஒரு வாரத்திற்குள் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை நேரில் சமூகமளிக்கவும்.

## காணி விற்பனைக்கு

இல 73, மாட்டீன் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 2 1/4 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. யாழ்ப்பாண புகையிரத நிலையத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் காணியின் நான்கு பக்க எல்லைகளும் பாதுகாப்பான முறையில் சுற்று மதில் கட்டப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு:

**044 787 807 7669** (காணி உரிமையாளர்)

## பராமரிப்பாளர் தேவை

நுணாவில் சந்திக்கு அருகாமையில் வீட்டையும் காணியையும் பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை தங்குமிட வசதியும் உண்டு (இருவர் கொண்ட குடும்பம் விரும்பத்தக்கது) சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **076 201 3654**

## வேலையாட்கள் தேவை

கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள ISO தரத்தின் கீழ் இயங்கும் தொழிற்சாலை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

- HR Manager (Human resource related degree)
- Lab chemistry (BSc in Chemistry, Biochemistry, Food science or Industrial chemistry)

தங்குமிடம், உணவு வழங்கப்படும். முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும்.

Email : venkadeswaraagroindustry@gmail.com

Whatsapp : **077 777 9448, 077 777 1457**

## வெல்டிங் வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வெல்டிங் கடை ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த வேலையாள் தேவை

மதிய உணவு வழங்கப்படும்

சம்பளம் : நாள் ஒன்றிற்கு 4,000/=

மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்

**077 937 0000, 075 988 1000**

## காணிகள் விற்பனைக்கு

கந்தர் மடச்சந்திக்கும் Hindu Ladies College க்கும் இடையில் 1 1/4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

- பிரதான வீதியில் இருந்தும் 2 ம் காணி
- சுற்றுமதில்
- குழாய்க் கிணறு
- மொத்தவிலை 27,500,000/=

தரகர் யாரும் தொடர்புகொள்ளவேண்டாம்

**077 225 5805** (காணி உரிமையாளர்)

## காணி விற்பனைக்கு

நாயன்மார்கட்டில் 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு

1 பரப்பு - 18 லட்சம்

தொடர்புகளுக்கு:

**077 295 1571**

## வீடு வாடகைக்கு தேவை

இருவர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு (வங்கி உத்தியோகத்தர்) யாழ் நகரத்திலிருந்து 3 Km தூரத்திற்குள் வீடு வாடகைக்குத் தேவை வீடு நன்றாக பராமரிக்கப்படும்

தொடர்பு: **075 235 9254**

## மணமகன் தேவை

1977 ல் பிறந்த விசாகம் நட்சத்திரம், 1ல் செவ்வாய் உள்ள அரச உத்தியோகத்தில் உள்ள மணமகளிற்கு மணமகன் தேவை.

தொடர்பு:- **077 844 8366**

## வாடகைக்கு

யாழ் நகரில் இரண்டு பெண் பிள்ளைகள் படிக்கும் அல்லது வேலை பார்க்கும் (இருவர் மட்டும்) சமையல் செய்யும் வசதி உண்டு. Anex வீடு, உடன் வாடகைக்கு உண்டு. கட்டில், மேசை, Fan, வசதி உண்டு. நீண்டகால வாடகைக்கு (வருடம் ஒன்று)

தொடர்பு: **076 942 9254**

## மணமகள் தேவை

யாழ் இந்து (V) நோர்வே நாட்டை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட (P.R) 45 வயதுடைய விவாகரத்துப் பெற்ற ஒருவருக்கு 40 வயதிற்குட்பட்ட வாழ்க்கைத்துணை தேவை. விவாகரத்தானவரும் ஏற்றுக் கொள்ளப்படும்.

தொடர்பு: **077 707 1761**

## வேலையாட்கள் தேவை

வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு நன்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை.

தொடர்பு: **077 232 3000**

## PickMe (Jaffna to Vavuniya)

உங்களிடம் வைத்திருக்கும் **முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், கார், வேன், லாரி** இருந்தால் நீங்கள் எங்களுடன் இலவசமாக இணையலாம் மாதம் Rs.150,000க்கும் மேல் வருமானம் நிச்சயம்.

**0774737737 | 0769447737**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 வைகாசி 11 ஞாயிற்றுக்கிழமை (25.05.2025) சிகரம் :146


மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் – நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினார் இவ்வுலகத்தில்.

– நாலடியார்

# ஒரு தீவு இரு நினைவு நாட்கள்

○ நிலாந்தன்





கடந்த 18ஆம் திகதியும் 19 ஆம் திகதியும் இலங்கைத் தீவில் இரண்டு மக்கள் கூட்டங்கள் இருப்பதனை மீண்டும் உணர்த்திய அடுத்தடுத்த நாள்கள். 18 ஆம் திகதி தமிழ் மக்கள் இன அழிப்பை நினைவுகூர்ந்தார்கள். 19ஆம் திகதி சிங்கள மக்கள் யுத்த வெற்றியைக் கொண்டாடினார்கள்.

பதினெட்டாம் திகதியை நோக்கி அந்த வாரம் முழுவதும் தமிழ் மக்கள் ஊர் ஊராக, சந்தி சந்தியாக கஞ்சி காய்ச்சிக் கொடுத்தார்கள். 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் மைதானத்தில் ஆயிரக்கணக்கில் கூடினார்கள்; உருகி அழுதார்கள்.

அடுத்த நாள் கொழும்பில் அரசாங்கம் யுத்த வெற்றியைக் கொண்டாடியது. காலையில் ஜனாதிபதி, உடல் ஊனமுற்ற படைவீரர்கள் தங்கியிருக்கும் இடத்துக்குச் சென்று அவர்களைக் கௌரவித்தார். அதன்பின் படைத்தளபதிகளோடு போய் யுத்த வெற்றி வீரர்களின் நினைவுச்சின்னத்தைத் தரிசித்தார். நாட்டின் ஒரு பக்கத்தில் தமிழ் மக்கள் துக்கத்தை அனுஷ்டித்த அடுத்தநாள் நாட்டின் தலைநகரில் சிங்கள மக்களும் அவர்களுடைய பிரதானிகளும் வெற்றியைக் கொண்டாடினார்கள். கிளிநொச்சியைச் சேர்ந்த ஓர் ஊடகவியலாளர் எழுதியது போல "மே பதினெட்டு கொல்லப்பட்டவர்களின் தினம்; மே பத்தொன்பது கொன்றவர்களின் தினம்".

பதினெட்டாம் திகதி பெரும்பாலான தமிழ் அரசியற்செயற்பாட்டாளர்கள் முள்ளிவாய்க்காலில் கூடியிருந்தார்கள். 19ஆம் திகதி பெரும்பாலான சிங்களத் தலைவர்கள் தமது வெற்றி நாயகர்களைப் போற்றி அறிக்கைவிட்டார்கள். பதினெட்டாம் திகதி தமிழ் மக்கள், உணவு ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட ஒரு யுத்தத்தின் நினைவாக கஞ்சியைப் பகிர்ந்தார்கள். முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னத்தின் முன் பூக்களை வைத்து அஞ்சலித்தார்கள். அதேநாளில் யுத்த வெற்றி வீரர்களின் நினைவுச்சின்னத்தின் முன் "பிவிதுறு ஹெல உரிமை"யின் செயற்பாட்டாளரான பெண் ஒருவர் சிறப்பு அதிரடிப்படை வீரருக்கு ஒரு ரோஜாப் பூவை பரிசளித்தார்.

பதினெட்டாம் திகதி முள்ளிவாய்க்காலில் கூட்டுத் துக்கமும் கூட்டுக் காயங்களும் கூட்டு இழப்பும் கூட்டு அவமானமும் கண்ணீராய் பெருகி ஓடின. 19ஆம் திகதி கொழும்பிலும் ஏனைய தென்னிலங்கை தலைநகரங்களிலும் கூட்டு வெற்றி கொண்டாடப்பட்டது.

18 ஆம் திகதி தமிழ் அரசியல்வாதிகள் தமது மக்களின் கூட்டுத் துக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள். அதே நாளிலும் அடுத்த நாளும் சிங்கள அரசியல்வாதிகள் யுத்த வெற்றியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது செய்தியில் ஓரிடத்தில் பின்வருமாறு கூறியுள்ளார். "சண்டை பிடிப்பது நமக்கு புறத்தியானது அல்ல. நாங்கள் சமர்க்களத்தில் சுய கட்டுப்பாடு உடையவர்கள். எங்களுக்கு நன்றாகத் தெரியும் சண்டை என்றால் என்ன? யாருடன் என்று? மகத்தான மன்னர்களான துட்டகைமுனு, வலகம்பா, தாதுசேனன், விஜயபாகு ஆகிய மகத்தான மன்னர்கள் அந்நியப் படையெடுப்பாளர்களை தோற்கடித்து வெற்றியை உறுதிப்படுத்திய நிலம் இது. பிரிட்டிஷ்காரர், டச்சுக்காரர், போர்த்துக்கீசர் போன்ற காலனித்துவ சக்திகளுக்கு எதிராக தேசபக்தர்கள் சமர் புரிந்த நிலம் இது. வீரபுரன் அப்பு, கெப்பிட்டிப்பொல போன்ற நாயகர்களும் பௌத்ததுறவிகளும் மேலாதிக்க சக்திகளுக்கு எதிராக எழுந்த நிலம் இது. நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்காக ஆயிரக்கணக்கான வீரம் மிகுந்த யுத்த நாயகர்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்து 30 ஆண்டுகால கொடிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த நாடு இது. "அதாவது அவர் சுட்டிக் காட்டும் உதாரணங்கள் அந்நியப் படைகளுக்கு எதிரானவை. அதாவது தமிழர்களையும் அவர் அந்நியராகத்தான் பார்க்கிறாரா?

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ "தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பிடமிருந்து தாயகத்தை விடுவித்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்" என்று தனது செய்தியில் கூறியுள்ளார்.

தாயகத்தின் நீட்சியும் அகட்சியுமாகக் காணப்படும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் குறிப்பாக கனடாவில் அண்மையில் ஓர் இன அழிப்பு நினைவகம் திறக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு வெளியே அதிக தொகை தமிழர்கள் வாழும் இடம் கனடா. அங்கே அந்த நினைவுத்தூபியை திறந்துவைத்து உரைநிகழ்த்திய பிரம்டன் நகர மேயர் பின்வருமாறு சொன்னார் "இன அழிப்பு நடந்தது என்பதனை ஏற்றுக்கொள்ளாதவர்கள் கொழும்புக்குத் திரும்பிப் போய் விடுங்கள்" என்று. ஆனால் கொழும்பிலிருந்து கொண்டு நாமல் ராஜபக்ச அதற்கு எதிராகக் குரல்கொடுத்தார். முன்னாள் வெளியுறவு அமைச்சரும் இந்நாள் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத்தும் கூறுகிறார்கள், நாட்டில் இன அழிப்பு நடக்கவில்லை என்று.

முள்ளிவாய்க்காலில் திரண்ட ஆயிரக்கணக்கான மக்கள் கூறுகிறார்கள் நடந்தது இன அழிப்பு என்று. கனடாவிலும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் வாழும் தமிழர்கள் கூறுகிறார்கள் அது இன அழிப்பு என்று. "பொறுப்புக்கூறலுக்கும், உண்மை, நீதி ஆகியவற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளைக் கனடா தொடர்ந்தும் ஆதரித்துவருகிறது" என்று கனேடியப் பிரதமர் மார்க் கார்ணி தனது செய்தியில் கூறியுள்ளார். அவருடைய செய்தியில் இன அழிப்பு என்ற வார்த்தையைப் பிரயோகித்திருக்கிறார். கனேடிய கொன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர், "இலங்கையில் இடம்பெற்றது இன அழிப்பு. ராஜபக்ச அரசாங்கத்தின் யுத்தக்குற்றங்களை ஒருபோதும் மறக்கக்கூடாது" என்று கூறியுள்ளார்.

அதாவது தமிழ் மக்களும் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளின் அரசியல்வாதிகளும் கூறுகிறார்கள், நடந்தது இன அழிப்பு என்று. அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களும் கூறுகிறார்கள் அது இன அழிப்பு இல்லை என்று. இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கூறுகிறார் "இன அழிப்பு என்று கூறினால் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும்" என்று.

மேற்கண்டவற்றைத் தொகுத்துப் பார்க்கும்பொழுது என்ன தெரிகிறது? இந்தச் சிறிய தீவில் இரண்டு வகை நினைவுச் சின்னங்கள் உண்டு. இரண்டு மக்கள் கூட்டங்கள் உள்ளன. இரண்டுவேறு அரசியல் அபிப்பிராயங்கள் உள்ளன. இரண்டு வேறு தேசங்கள் உள்ளன. இரண்டும் ஒன்றுக்கு ஒன்று எதிரான அபிலாஷைகளோடும் இருவேறு அரசியல் நிலைப்பாடுகளோடும் காணப்படுகின்றன.

ஆனால் அரசுத் தலைவர் அநுர வெற்றிவீரர்களின் சின்னத்தை முன்னிறுத்தி பின்வருமாறு கூறியுள்ளார் "இந்த நினைவிடத்தின் முன் நாம் நின்று அவர்களுக்கு உரிய மரியாதை செலுத்துவது என்பது மீண்டும் ஒரு மோதல் ஏற்பட இடமளிக்காமல், வெறுப்பு நிறைந்த சமூகத்திற்குப் பதிலாக, சகோதரத்துவம் அன்பு மற்றும் நல்லிணக்கம் நிறைந்த சமூகத்தை உருவாக்கத் தயார் என்று உறுதிமொழியை எடுப்பதற்காகவே" என்று.

02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டமைக்கப்பட்ட அஞ்சலிக்கு கனதி அதிகம்!

ஆர். பிரகாஷ்

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைகளை முன்னிட்டு இம்முறையும் உலகளாவிய ரீதியில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்களின் பங்கெடுப்பில் கனடா, பிரான்ஸ், பிரிட்டன், இந்தியா, சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா என்று அந்தாட்டிகா நீங்கலாக உலகின் அத்தனை கண்டங்களிலும் நினைவேந்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஆனால், இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முழுமை பெற்றுள்ளனவா? முறையான வகையில் முன்னெடுக்கப்பட் டுள்ளனவா? என்று கேட்டால், 'இல்லை' என்பதே பதில்.




நினைவேந்தல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக முன்னெடுக்கப்படவேண்டியவை அல்ல. நன்கு கட்டமைக்கப்பட்ட பொறிமுறையூடாகவே அவை முன்னெடுக்கப்படவேண்டும். அப்போதுதான் அதன்மூலம் சொல்லப்படும் செய்தி மிகப் பாரதூரமாகக் காணப்படும். இதை இம்முறை பிரம்டன் நகரில் இடம்பெற்ற நினைவேந்தல் மூலம் அறியவும் உணரவும் முடிந்தது. கனடாவில் ஈழத்தமிழர்கள் மிகவும் அதிகளவில் வாழும் மாகாணம்தான் ஒன்றாரியோ. அந்த மாகாணத்தின் பிரம்டன் நகரில் 'தமிழர் இனப்படுகொலை நினைவாலயம்' ஒன்றை நகர, மாகாண, மத்திய அரசுகளின் அனுமதியுடன் ஈழத்தமிழர்கள் அமைத்தனர். ஈழத்தமிழர்கள் எவ்வாறு முள்ளிவாய்க்காலில் திரண்டு அஞ்சலிக்கின்றனரோ அவ்வாறுதான் இம்முறை கனேடியத் தமிழர்கள் பிரம்டனில் ஒன்றுகூடி அஞ்சலித்தனர். இதன்மூலம் பேரினவாதத்துக்கு பெரும் செய்திகளை அனுப்பினார்கள்.

போர் முடிவுக்குவந்து 16 ஆண்டுகளில் முன்னெப்போதும் இல்லாத வகையில், சிங்கள பேரினவாதிகள் கனடாவில் இம்முறை கடைப்பிடிக்கப்பட்ட நினைவேந்தலை முன்னிட்டு பதற்றமும் பரபரப்பும் அடைந்தமைக்குக் காரணம், அதுவொரு கட்டமைக்கப்பட்ட நிகழ்வாக அமைந்தமையே. உண்மையில் இது அடுத்த கட்டத்தை நோக்கிய முயற்சி. இவ்வாறான கட்டமைக்கப்பட்ட நினைவேந்தல்களை பேரினவாதம் உணர்ந்திருக்கின்றது. அதுவே இம்முறை வெளிப்பட்ட கூக்குரலின் பிரதிபலிப்புமாகும்.

பிரான்ஸ், பிரிட்டன், இந்தியா, சுவிட்சர்லாந்து, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் வசிக்கும் ஈழத்தமிழர்கள், எந்த மாகாணத்தில் அல்லது நகரத்தில் அதிகளவில் வசிக்கின்றனரோ அங்கு நினைவாலயங்களை அமைக்க வேண்டும். நகர, மாகாண மத்திய அரசுகளின் அனுமதியைப் பெற்று அந்த நினைவாலயங்கள் அமைக்கப்பட்டால், அதன் தாக்கம் பெரியது. அத்தகைய முயற்சிகளில் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் ஈடுபடவேண்டும்.

நாற்பது - ஐம்பது புலிக்கொடிகளையும், மெழுகுவர்த்திகளையும் ஏந்தி ஆங்காங்கே சிதறல்களாக மேற்கொள்ளப்படும் நினைவேந்தல்களால், கவனக்குவிப்பைப் பெறலாம். ஆனால், அத்தகைய நினைவேந்தல்களால் ஒருபோதும் அழுத்தங்களை வழங்க முடியாது. அதனால்தான், இந்த் விடயத்தில் இம்முறை பிரம்டன் தனித்துநிற்கின்றது. ஒன்றுபடுதல் என்பது ஆயுதப்போருக்கும், அரசியல் போருக்கும் மாத்திரமானதன்று, நினைவேந்தலுக்கும் அது அவசியம்.

# ஒரு தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)




அந்த நினைவுச்சின்னமே நல்லிணக்கத்திற்கு எதிரானது. ஓர் இனத்தின் வெற்றியைக் கொண்டாடுவது. நாடு இப்பொழுதும் வென்றவர்கள் தோற்றவர்கள் என்று இரண்டாகதான் நிற்கிறது. நாட்டின் வடக்கில் முள்ளிவாய்க்காலில் மற்றோர் நினைவுச்சின்னம் உண்டு. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக வந்த ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் ஒருவர்கூட அந்த நினைவுச்சின்னத்துக்கு வரவில்லை. அங்கே ஒரு பூவைக்கூட வைக்கவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மக்களின் வாக்குகளை எந்த சஜித்துக்கு, சுமந்திரன் சாய்த்துக்கொடுத்தாரோ அந்த சஜித்தோ அவருடைய கட்சிப் பிரமுகர்களோ அந்த நினைவுச்சின்னத்துக்கு வரவில்லை. அங்கே ஒரு பூவைக்கூட வைக்கவில்லை. ஆனால் சுமந்திரன் கொழும்பில் மே 18ஐ நினைவுகூர்ந்தபொழுது, சஜித் யுத்த வெற்றியைப் போற்றி அறிக்கைவிட்டிருந்தார். சிங்களத் தலைவர்கள் எப்பொழுதும் தெளிவாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வாக்காளர்களுக்கு உண்மையாக இருக்கிறார்கள். ஆனால் தமிழ் அரசியல்வாதிகளில் எத்தனை பேர் அப்படியிருக்கிறார்கள்? நாடாளுமன்றத் தேர்தலிலும் உள்ளூராட்சிசபைத் தேர்தலிலும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற அநுர 19 ஆம் திகதி தனது உத்தியோகபூர்வ செய்தியில் பின்வருமாறு கூறியுள்ளார். "நாம் முழுமையான வெற்றியாளர்கள் அல்ல. நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதன்மூலம் மட்டுமே நாம் முழுமையான வெற்றியாளர்களாக மாற முடியும். எனவே அச்சமின்றி சமாதானத்துக்காக எடுக்கக்கூடிய ஒவ்வொரு நடவடிக்கையும் எடுக்க நாம்தயாராக இருக்கிறோம். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததன்மூலம் தாய்நாட்டின் முழுமையான சுதந்திரத்தை நாம் பெறவில்லை."

கடந்த 16 ஆண்டுகளில் ஒரு பேருண்மையை ஒப்புக்கொண்ட முதலாவது ஜனாதிபதி அவர். 2009 மே மாதம் தாங்கள் பெற்ற வெற்றி முழுமையானது அல்ல என்பதனை அவர் ஒப்புக்கொள்கிறார். போரில் வெற்றிபெற்ற பின்னரும் நாட்டில் சமாதானத்தை உருவாக்கமுடியவில்லை என்பதனை அவர் ஏற்றுக்கொள்கிறார். அதுதான் உண்மை. தமிழ் மக்களுக்குச் சமாதானம் இல்லையென்றால் சிங்கள மக்களுக்கும் சமாதானம் இல்லை. இந்தப் பிராந்தியத்துக்கும் சமாதானம் இல்லை. 16 ஆண்டுகளின் பின்னரும் வென்றவர்களுக்கும் தோற்றவர்களுக்கும் இடையே இரண்டாகப் பிளவுண்டிருக்கும் இலங்கைத் தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பரமபதம்

எம்.முபாறக்




உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவு களின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ள போதிலும், எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்தால் ஆட்சி அமைக்கக்கூடிய வகையில் நூற்றுக்கு மேற்பட்ட சபைகள் உள்ளன. எனவே எதிர்கட்சிகளை ஒன்றிணைத்து அந்தச் சபைகளை கைப்பற்றி தனது கட்சியின் வீழ்ச்சியை ஓரளவாவது சரிசெய்வதற்குத் திட்டம் வகுத்துள்ளாராம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த ரணில் நாடு திரும்பிய உடனேயே மஹிந்தவைச் சந்தித்திருக்கிறார். கொழும்பு, விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள மஹிந்தவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சுகவீனமுற்றிருந்த மஹிந்தவை சுகம் விசாரிப்பதாக இந்தச் சந்திப்பு அமைந்திருந்தாலும் உள்நோக்கம் அதுவல்ல. சில சபைகளில் ஆட்சியைப் பிடிப்பதே இதன் நோக்கம். மஹிந்தவிடம் சுகநலம் விசாரித்துவிட்டு, மெல்லக் கதையைத் துவக்கினார் ரணில்.

"எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து பயணிக்கவேண்டிய காலம் வந்துள்ளது "

"ஓம்.. ஓம்... நிறைய இடங்களில் மக்கள் அரசுக்கு அதிகாரம் கொடுத்துள்ளார்கள். அவர்கள் செய்து விட்டுப் போகட்டும் " என்று பதில் வழங்கினார் மஹிந்த.

"இருந்தாலும், நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் அவர்களால் ஆட்சிசெய்யமுடியாது. எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்தால் ஆட்சி அமைக்கலாம்" என்று பிடிகொடுக்காமல் கூறினார் ரணில்.

"ஓம் அப்படியான இடங்கள் இருந்தால் எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்து ஆட்சி செய்வதில் பிரச்சினை இல்லைத்தான். அப்படி என்றால் எதிர்கட்சிகளுடனும் பேசுங்கள், நாமலுடனும் பேசுங்கள் " என்று மஹிந்த யோசனை சொல்லியிருக்கிறார். ரணிலும் தலையாட்டிவிட்டுச் சில அரசியல் பரமபத ஆட்டங்களைத் தொடங்கியிருக்கிறார்.

## சஜித் ஏன் வரவில்லை?

மஹிந்தவைச் சந்தித்த சூட்டோடு அவர் கொடுத்த க்ரீன் சிக்னலோடு உடனே களத்தில் இறங்கியிருக்கிறார் ரணில். கடந்த புதன்கிழமை எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் அனைவரையும் தனது அலுவலகத்துக்கு அழைத்து இது தொடர்பில் பேச்சு நடத்தினார். எல்லா எதிர்கட்சிகளிலும் இருந்து அவற்றின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

சஜித் மாத்திரம் கலந்துகொள்ளவில்லை. இதனால் அங்கு சிறு சலசலப்பு.

அவர் இதற்கு விரும்பவில்லையோ . அப்படியென்றால் ஆட்சி அமைப்பது சிக்கலாகுமே என்று பேசிக்கொண்டனர் அங்கு வந்தவர்கள்.

அதற்கு முற்றுப்புள்ளி வைத்தார் அனுரபிரியதர்சன யாப்பா.

" நான் சஜித்துடன் பேசிவிட்டேன். அவர் ஆதரவுதான்" என்றார்.

அதன் பிறகுதான் எதிர்க்கட்சிகளுக்கு ஒரு நம்பிக்கை பிறந்ததாம்.

## அறிந்தும் அறியாமலும்

இந்தச்சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டவர்களுள் தெரென தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவரும் சர்வஜன பலய கட்சியின் தலைவருமான திலித் ஜயவீரவும் ஒருவர்.

ஆனால், அவரும் வரவில்லை. இதனால் குழம்பிப் போன சிலர் ரணிலிடம் கேள்வி எழுப்பினர்.

"அது பிரச்சினை இல்லை. இதோ அவருக்குக் கோல் எடுக்கிறேன் " என்று கூறி ரணில் திலித்துக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்திருக்கிறார்.

அந்தச் சமயத்தில் திலித் கம்பஹா பகுதியில் நடந்த திருமண நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டிருந்தார். அதனால்தான் அவரால் அங்கு வரமுடியவில்லை. அங்கு அதிக சத்தம் காரணமாக திலித்தால் ரணிலின் தொலைபேசி அழைப்புக்கு சரியாக பதில் வழங்க முடியவில்லை. ஆனால், ரணிலோ வந்திருப்பவர்களை நம்ப வைப்பதற்காக திலித்தும் இதற்கு ஆதரவு என்று சொல்லிவிட்டார் என்று கூறினார். இதன் பின் ஊடகங்களில் ' உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான ரணில் தலைமையிலான கூட்டணி யில் திலித்தின் சர்வஜன பலயக் கட்சியும் உள்ளது' என செய்திகள் வெளியாகின.

இந்தச் செய்தியைப் பார்த்ததும் ஆடிப்போனார் திலித்.

"நான் எப்போது ஆதரவு என்று சொன்னேன்? " என்று தன்னைத்தானே கேட்டுவிட்டு, உடனடியாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவரது நிலைப்பாட் டைத் தெளிவுபடுத்தினார்.

"உள்ளூராட்சிசபைகளில் எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைப்பதற்குத் தேவைப்படும் ஆதரவை அந்தந்த சபைகளில் வெவ்வேறு எதிர்க்கட்சிகளுக்கு வழங்குவதற்கு எமது கட்சி தயார். ஆனால், இதற்காக ரணிலின் கூட்டமைப்பில் நாம் இணையமாட்டோம்" என்று ஒரே அடியில் அடித்துவிட்டாராம் திலித். தான் போட்ட கணக்கு எல்லோருக்கும் தெரிந்துவிட்டதே என்று இப்போது ரணில் முழிக்கிறாராம்.

## காலை வாரும் ரணில்

எதிர்கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டணி ஒன்றை அமைத்து ஆட்சி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றபோதிலும் மறுபுறம், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்து விடாதவாறு காய்நகர்த்தி வருகிறார் ரணில் .

160க்கும் மேற்பட்ட சபைகள் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்கும் நிலையில் இருப்பதால் அந்தச்சபைகள் அனைத்தையும் ஏனைய எதிர்க்கட்சிகளின் உதவியுடன் தனது கட்சி கைப்பற்ற வேண்டும் என்பதுதான் சஜித்தின் திட்டம். அதற்கான காய் நகர்த்தலை அவர் மேற்கொண்டு வருகிறார். ஆனால், ரணிலோ அப்படி நடக்க விடாமல் சஜித்தின் காலை வாரிவிடும் வேலையில் ஈடுபடத் தொடங்கியுள்ளார். கொழும்பு மாநகர சபையை திசைகாட்டி கைப்பற்றியுள்ளபோதிலும் சஜித் தலைமையில் எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து ஆட்சியைப் பிடிக்கும் நடவடிக்கை ஒன்றை சஜித் தொடங்கியுள்ளார்.

ஆனால், இந்த இடத்திலும் ரணில் தன் திருவிளையாடலைக் காட்டத் தொடங்கியுள்ளார். சஜித் தரப்பு கொழும்பு மாநகரசபையைக் கைப்பற்றமுடியாதவாறு சதி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார் அவர். கொழும்பு மாநகரசபைக்குத் தெரிவாகி இருக்கும் ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களை தனித்தனியாக சந்தித்து 'கொழும்பு மாநகரசபையில் பெரும்பான்மை இடங்களைப் பிடித்துள்ள திசைகாட்டியே அதை ஆட்சிசெய்ய வேண்டும். அதற்கு நாம் இடம் கொடுக்கவேண்டும்' என்று கூறி வருகிறாராம் . ஆனால்'எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியைப் பிடிக்கவேண்டும். அதில் நாம் பங்காளிகளாகி சுகபோகம் அனுபவிக்க வேண்டும்' என்று விரும்புகிற ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ரணிலின் இந்தப் போதனையை விரும்பவில்லையாம் . ரணிலின் அரசியல் எதிரி சஜித் மட்டும்தான். அவரை தன்னோடு அரவணைத்து வைத்திருப்பதுபோல நடித்து, சஜித்தின் அரசியல் எதிர்காலத்தை இல்லாமல் ஆக்கவேண்டும் என்பதுதான் ரணிலின் திட்டம். இதற்காக ரணில் பல தேர்தல்களில் கூட்டணி என்ற பெயரில் சஜித்தை தன்னோடு இணைப்பதற்கு முயற்சிசெய்தபோதிலும் சஜித் சிக்கவே இல்லை. சஜித்துக்குத் தெரியும்தானே ரணில் யாரென்று...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயோ பாவம்!

நீதியைப் பேசாது தூசணத்தையே பேசி ஊரார் சொத்துகளைப் பிடுங்கி விற்றுத் தின்றுவருபவள் இந்திரா.



நெடுந்தீவு செ.மகேஷ்

சஞ்சீவி சிறுகதை

ஆடை குலைந்து, கண்கள் குழிவிழுந்து, அழகு தொலைந்து அதோ போகிறாள் அவள்தான் தூசண விசரி. அவள் வாய் தூசணத்தையே தொடர்ந்து முணுமுணுக்கும். திடீரென யாரையோ ஏசி முன்னெடுக்கும் தூசண வார்த்தைகள் அவள் வாயில் இருந்திருந்து உரத்து மேலேழும். இப்பொழுது இவள் இப்பாதையில் ஊரார் பார்த்துச் சிரிக்கும் ஒரு வேடிக்கை விசரி.

இவளுக்கு என்ன நடந்தது? வேதனையோடு இவளைப் பார்ப்போரும் விரக்தியோடு இவளைப் பார்ப்போரும் இன்றும் இருக்கிறார்கள். தூசண விசரி இந்திரா எனச் சொல்வோரும் உளர். இந்திரா, சந்திரா, சுந்தரா என்று அடுத்தடுத்துப் பிறக்கிற பெண்பிள்ளைகளுக்கு கந்தப்பிள்ளை ஓசை இனிக்கப் பெயர்வைத்ததென்னவோ உண்மைதான். இத்தனை பெண் பிள்ளைகளுக்கு மத்தியிலே பெயர்ப்பொருத்தம் எவருக்குமே பொருந்தவில்லை. நாங்களுந்தான் தமிழ்ப் பெயராய் வைக்கவேணும் என்போம். முதலெழுத்து' ட' வரிசையென்றதும் 'டைசாயினி' என்று வைத்த உலோகன் மகள் கிணற்றுக்குள் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டாள். பெயர்ப்பொருத்தம் இப்படி ஆகிவிட்டதோ? 'டை' என்ற ஆங்கிலமும் 'சா' என்ற மரணமும் ஒன்றித்துத் தற்கொலைக்குத் தூண்டியதோ, என்னத்தைச் சொல்ல?

கடவுள் பெயரை வைப்பதாயின் பார்வதி, மீனாட்சி, லட்சுமி என்று வைத்துத்தொலைப்பதும் இங்கு வழக்கம் தானே.

எந்தப் பெயரை எப்படி வைத்தாலும் பெயருக்கேற்ப மகாத்மாகாந்தியாகவோ, காமராஜராகவோ வாழ்ந்து போனவர்கள் மிகச்சிலரே. அப்பு ஆச்சி வைத்த அழகான பெயர் மங்க வைக்க, ஒவ்வொருவரும் செய்யும் அடாவடித்தனத்தோடுகூடிய புதிய பெயர்களே இன்று ஊரார் வாயில் ஒட்டிக்கொள்கின்றன. தூசண மணியம், காட்டான் கணபதி, திருட்டுச்சூரி, முழியன் சின்னான் ………… இப்படிப் பல பெயர்கள் இவர்களை இனங்காணச் சந்தர்ப்பம் கண்டு சூட்டப்படுகின்றன.

இந்த இந்திராவுக்குத் தந்திரா என்ற பெயர்தான் பொருத்தம் என்போரும் தூசண இந்திரா என அழைப்பதும் தகுமே எனப்பலர் கூறுவதும் கேட்கிறது. சண்டையொன்று வந்தால் நீதி நியாயம் பேசுவது நியாயமில்லைப் போலும். சண்டை பிறப்பதைத் தொடர்ந்து ஏசித் தாண்டவமாடக் கெட்ட வார்த்தைகளுக்குண்டாகும் மதிப்பு அதிகந்தான். அந்த வார்த்தைகள் கொடுக்கும் அர்த்தங்களுக்கும் மேலாக எதிர்நிற்பவரை அவமானப்படுத்துவதில் அந்த வார்த்தைகளுக்கு வலிமை அதிகந்தான். இவளுடைய வாயிலிருந்து வாற தூசணத்தைக் கேட்க இயலாமல் பலரும் மௌனமாவது உண்மைதான். இப்படி ஒரு பெண்ணா எடுத்ததற்கெல்லாம் சண்டை போடுவதிலும் தூசண வார்த்தைகளால் எதிராளியின் வாயை அடைத்துப்போடுவதிலும் இவள் மகா கெட்டிக்காரி. தனது காணிவேலியை அடுத்த வீட்டான் வேலி எல்லையிலிருந்து அரக்கி அரக்கி ஆக்கிரமித்தல் முதல் ஏமாந்திருக்கும் வேளை பார்த்து எதிர்வீட்டுக்காரன் தேங்காய், மாங்காய் எல்லாம் காரியமாகக் கண்மூடித் திறக்கும் முன்னரே களவாடிவிடுவாள்.

கேட்டால் பொய் சொல்வதோடு வாய்க்கு வந்தபடியெல்லாம் ஏசித் தீர்த்துவிடுவாள். இவள் செய்வது களவென்றும், சொல்வது பொய்யென்றும் தெரிந்திருந்தாலும் ஊமையாகி விடுபவர்களோ அநேகர். அவளது ஒரேயொரு நீதி வாக்கியம் தூசணமே!

இன்று வந்து சிக்கிக்கொண்ட மரியாதையுள்ள மாஸ்ரருக்கு என்ன நடக்கிறது? தூசண வார்த்தைகளால் தொடரும் அர்ச்சனைகளால் அவர் அதிர்ந்துபோனார். அப்படி இவளுக்கு மாஸ்ரர் என்ன தவறிளைத்தார்? வேடிக்கை பார்க்க வந்தோர், இந்த அருமையான உத்தமமான மாஸ்ரர் அப்படி என்னதான் செய்தார் என எல்லோருமே வாய்புதைத்து நிற்க அவள் ஏசுவதில் ஏதோ உண்மை இருக்கும் என்ற எண்ணம் சிலருக்கு மேலெழுந்தது.

அப்படி என்ன நடந்தது?

"பெண்பிள்ளையான இந்திராவைக் கட்டி அணைத்துவிட்டார் மாஸ்ரர்" என்று கதை சொன்னாள் இந்திரா .

மாஸ்ரர் பெரிதாக வாய்திறக்கும் வலிமையின்றி உடனேயே "ஐயையோ நான் ஒன்றும் செய்யவில்லை, ஒன்றுமே செய்யவில்லை" என்ற வார்த்தைக்கு அப்பால் எதனையும் சொல்லும் திராணியற்றுத் தவித்தார். சற்றே பயந்தும் போனார். அவளோ அடங்குவதாக இல்லை. சிறு கூட்டம் கூடியேவிட்டது. மாஸ்ரர் திகைத்துநிற்பது தெரிகிறது. தூசண இந்திரா தனது தூசண மந்திரத்தால் மாஸ்ரரைப் பேசுவதும் ஏசுவதும் இப்போது உயர்ந்தே தொனித்தது. கூடி நின்றோரில் சிலர் அவளின் வார்த்தையை நம்பவே செய்தனர்.

இந்த இந்திராவுக்குத் தந்திரா என்ற பெயர்தான் பொருத்தம் என்போரும் தூசண இந்திரா என அழைப்பதும் தகுமே எனப்பலர் கூறுவதும் கேட்கிறது. சண்டையொன்று வந்தால் நீதி நியாயம் பேசுவது நியாயமில்லைப் போலும். சண்டை பிறப்பதைத் தொடர்ந்து ஏசித் தாண்டவமாடக் கெட்ட வார்த்தைகளுக்குண்டாகும் மதிப்பு அதிகந்தான்.

மாஸ்ரர் பல பள்ளிகளில் ஆசிரியராகப் படிப்பித்து ஓய்வுபெற்றிருந்தார். அத்துடன் அரசின் நற்பிரசையாகி ஊரார் மதிக்கும் சமாதான நீதவான் பட்டத்தையும் பெற்றிருந்தார். இந்தச் சமாதான நீதவான் பட்டமே இன்று அவரை இந்திராவுக்கு எதிரியாக்கியது. அவரிடத்தில் இருந்த உண்மையும் நேர்மையும் எந்தவேளையிலும் நீதி தவறாத அவரது செய்கைகளை என்றும் அலங்கரித்தே வந்தன. மனைவியை என்றோ இழந்தவர் மறுமணம் செய்யாமல் ஒரேயொரு மகளை வளர்த்துப் படிப்பித்துக் கலியாணமும் செய்துகொடுத்துக் களிப்போடிருப்பவர் . உடலின்பத்துக்காக என்றுமே தவறிழைத்ததாக அறியப்படாதவர். ஆனால் "உணர்வுகள் உள்ளவர் தானே தூசண இந்திராவைத் தொட்டிழுத்திருக்கலாம்" என்றும் சிலர் நம்பினார்கள்.

நீதியைப் பேசாது தூசணத்தையே பேசி ஊரார் சொத்துகளைப் பிடுங்கி விற்றுத் தின்றுவருபவள் இந்திரா.

அவளின் தூசண ஆராதனை அடங்க நெடுநேரமானது. அவள் இப்போது போய்விட்டாள், அவள் போன பின்னர்தான் அவளின் பொய் உறுதிக்கதையை மாஸ்ரர் சொன்னார்.

அவ்வாறு பொய் உறுதி எழுதிக் காணி விற்கத் துணிந்தவள் தூசண இந்திரா. அவளுக்குச் சமாதான நீதிவானான மாஸ்ரர் சாட்சிக் கையொப்பமிட மறுத்த செய்தி இப்பொழுதுதான் வெளியே வந்தது.


இத்தனை துணிவாக மாஸ்ரர்மீது இத்தகைய பழியைப் போட இவள் ஏன் துணிந்தாள்? கடந்தகால அவலங்களால் ஊரைவிட்டு நாடுகடந்தோர் பலரும் இங்கே திரும்பி வரப்போவதில்லை. அவர்களின் சொத்துகளுக்கு உரிமை கொண்டாடி அவற்றை விற்றுப் பணமாக்கும் தந்திரத்தை இவள் எங்கே எவ்வாறு கற்றுக் கொண்டாள்? எல்லோரும் மூக்கிலே விரல் வைத்திருக்க இவளின் தந்திரம் இதுநாள்வரை வெற்றியை நோக்கியே விரைந்து பயணித்தது. இன்று உண்மைகள் இவளைக் காட்டிக் கொடுக்க வெளிச்சமானபோது இதுவரை ஒத்துழைத்த யாவருமே இவளை ஓரங்கட்டினர். மாஸ்ரர் இவளது பொய்யை மெய்யெனக் கூறும் சத்தியக்கூற்றுக்குச் சம்மதம் தெரிவித்து கையொப்பம் வைக்க மறுத்தார். ஆத்திரமுற்ற தூசண விசரி மாஸ்ரர்மீது அபாண்டமான பலாத்காரத் தந்திரத்தை முன்வைத்தபோது … ஒரு சிலர் நம்பவே செய்தனர். எனினும் நீதியற்ற செயல் தெரிந்து நாடகமாடிய இந்திரா, தூசண விசரியாக உளப்பூர்வமாகப் பாதிப்புற்று இதோ இந்தப் பாதையிலேயே அடிக்கடித் தோன்றுகிறாள். பாவம்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓ கணபதி சர்வானந்தா

# அநாதைக் காசோலை



காலை ஒன்பது மணிக்கு வங்கி திறந்துவிடும். அந்தக் காசோலையை மாற்றலாம். மாற்றிய பின் ஒன்றன்பின் ஒன்றாகச் செய்யவேண்டிய பணிகளை குணதேவன் மனதுக்குள் திட்டமிட்டுக்கொண்டான். எட்டரை மணியளவில் ஒப்பந்தக்காரரின் வீட்டுக்குப் போனால்தான் காசோலையை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். காசோலையில் எழுதப்பட்ட தொகை பெரியது. அதனை மாற்றி, ஒரு பகுதியைக் கொடுக்கவேண்டியவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இன்னும் ஒரு பகுதியைப் பிரித்து இரண்டு வங்கியில் உள்ள கணக்குகளில் வைப்பிலிடவேண்டும். அதற்கு முந்திய தினத்தில் அவன் தனது வங்கியில் எடுத்த கடன்தொகையைக் மீளக் கட்டியாகவேண்டும். அது பிழைத்தால் மறுமுறை வங்கி முகாமையாளரிடம் கடன்பெறமுடியாது. இத்தனை காலமாக அவன் வாக்குப் பிழைக்காததால்தான் அவன் தனது கணக்கைச் சீராக வைத்திருக்கமுடிகிறது. எல்லாம் ஒருவித நம்பிக்கையின் அடிப்படையினாலானது. அதனைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும். அத்தனையையும் எண்ணி அவன் தன்னையறியாமலே பெருமூச்சு விட்டுக்கொண்டான்.

அவன் காசோலையை ஒப்பந்தக்காரரிடம் பெறப் புறப்பட்டான்.

ஒரு நீண்டதூரப் பயணத்தின் பின் பனை வடலி வழியே செல்கின்ற அந்தச் சிறிய பாதையினூடாகச் சென்று நவீன இரும்புக்கதவு பொருத்தப்பட்ட படலையின் முன் காரை நிறுத்திக்கொண்டான். . அல்சேஷன் இன நாயொன்று குரைத்தபடி படலையை நோக்கி வந்தது. அதுகூடவே ஒருவன் வேட்டியோடு வந்தான். என்ன என விசாரித்தான். 'ஐயாவைப் பார்க்கவேண்டும்'குணதேவனின் பதில் அதுவாக இருந்தது. 'வாருங்கள்' என வேட்டிக்காரன் அவனைக் கூட்டிச்சென்றான்.

அரசமாளிகை போன்ற அந்த மாடிவீட்டின் ஓர் அறையில் இருந்து சுப்ரபாதம் ஒலித்துக்கொண்டிருந்தது. கம கம என ஜவ்வாது ஊதுபத்தியின் வாசம் மூக்கைத் துளைத்தது. மனதுக்கு இதமான ஒரு சூழலில் குணதேவன் உட்கார்ந்திருந்தான். அவன் அங்கு இருந்தான். அவன் மனது மட்டும் சுற்றித்திரிந்தது. அவனை அலைக்கழித்துக்கொண்டிருந்தது.

நெற்றியில் அழுத்திவைக்கப்படிருந்த திருநீற்றுப்பட்டையோடு ஒப்பந்தக்காரர் குணதேவன் முன்வந்து நின்றார். எழுதப்பட்ட காசோலையை அவனிடம் நீட்டினார். 'எனது வங்கிக் கணக்குக் காலை பத்து மணி அளவில்தான் இற்றைப்படுத்தப்படும், எனவே அதன் பின் வங்கிக்குச் சென்றால் அதனை இலகுவாக மாற்றலாம்' என்று ஒப்பந்தக்காரர் அவனுக்குப் பரிந்துரைத்தார். 'பரவாயில்லை ஒரு மணி நேரம் தாமதமாகப் போகவேண்டும் அவ்வளவுதானே! ' என மனதில் எண்ணிக்கொண்டவாறு அவரிடம் இருந்து குணதேவன் விடைபெற்றுக்கொண்டான். நாய் படலைவரை வந்து அவனை வழியனுப்பிவைத்தது.

சரியாகக் காலை பத்து மணியளவில் குணதேவன் வங்கியை வந்தடைந்தான். பணத்தை வைத்து எடுத்துச்செல்வதற்குரிய கைப்பையை எடுத்துக்கொண்டான். மாற்றப்போவது பெரிய தொகை. அதனால் கட்டாயம் அதைக் கேட்பார்கள். சட்டைப் பையில் தேசிய அடையாள அட்டை இருப்பதை மீண்டும் உறுதிசெய்துகொண்டான்.

வங்கியில் பணத்தை விநியோகிக்கும் கருமபீடத்தின் முன் ஒரு சிறிய வரிசை. அதில் அவன் நான்காவது ஆளாக நின்றுகொண்டான். வரிசை வேகமாக நகர்ந்தது. காசாளரின் திறமையை அது உறுதிப்படுத்தியது. காசாளர், அவனிடம் காசோலையைப் பெற்றுக்கொண்டார். சட்டெனக் காசாளரின் முகம் சுருங்கியது.

உடனேயே காசாளர் அந்தக் காசோலையை எடுத்துக்கொண்டு வங்கி முகாமையாளர் அறைக்குச் சென்றுவிட்டு வந்து, முகாமையாளர் அவனை அழைப்பதாகச் சொன்னார்.

குணதேவன் முகாமையாளரின் அறைக்குள் சென்றதும் அவர் அவனை இருக்குமாறு கேட்டுக்கொண்டார். 'இந்தக் காசோலையை மாற்றுவதில் சிக்கல்' என்று ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார் முகாமையாளர்.

"ஏன்? அவரது கணக்கு இன்னும் இற்றைப்படுத்தப் படவில்லையா?" என்று குணதேவன் கேட்டான்.

'கணக்கில் பணம் உண்டு. ஆனால் அதனைத் தருவதில்தான் சிக்கல் . வங்கியின் செயற்கை நுண்ணறிவு அந்தக் கணக்கை முடக்கியிருக்கிறது' என முகாமையாளர் சொன்னதும் அவன் பதற்றமடைந்தான். அந்தக் குளிரூட்டிய அறையிலும் அவனுக்கு வியர்த்துக்கொட்டியது. அவனையறியாமலே முகாமையாளருக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த தண்ணீரை எடுத்துக் கட கட எனக் குடித்தான். அவன் கைகள் பதறின.

முகாமையாளர் அவனை ஆசுவாசப்படுத்தினார். 'என்ன நடந்தது?' என அவன் முகாமையாளரைக் கேட்டான்.

'அந்தக் காசோலையில் ஒப்பமிட்ட அந்த ஒப்பந்தக்காரர் இப்போது உயிரோடு இல்லை என்று சொல்லி அவரின் கணக்கை வங்கியின் செயற்கை நுண்ணறிவு முடக்கியிருக்கிறது ' என்று முகாமையாளர் சொன்னதும் குணதேவன் கண்களை மூடிக்கொண்டான். சிறிது நேரத்தின் பின் அவன் முகாமையாளரோடு நிதானமாக உரையாடத்தொடங்கினான். அவரே காலை ஒன்பது மணியளவில் அந்தக் காசோலையை அவனுக்குத் தந்ததாகவும் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தான். 'சரி அவரது தொலைபேசி எண் உங்களிடம் உண்டல்லவா? அழையுங்கள் பார்க்கலாம் 'என முகாமையாளர் சொன்னார். பலமுறை அழைத்தும் பயனில்லை. மீண்டும் அழைத்தான். மறுமுனையில் இருந்து ஒரு கரகரத்த குரல் பதிலளித்தது. 'ஐயா மாரடைப்பால் இறந்துவிட்டார்' என அந்தக் குரல் சொன்னது. அவனையறியாமலே அவனது அந்த நவீனதொலைபேசி அவன் மடியில் விழுந்துதெறித்தது.

வங்கி முகாமையாளரின் கைத்தொலைபேசியில் ஒரு முகநூல் குறிப்பு வந்ததை அவர் அவதானித்தார். முகநூலைத் திறந்தார். அதில் லண்டனில் உள்ள அந்தக் காசோலைக்குரிய ஒப்பந்தக்காரரின் மைத்துனி அந்தப் பதிவை இட்டிருந்தார். ஒப்பந்தக்காரரின் புகைப்படத்தோடு அவர் இறந்துவிட்டதாகச் சொல்லி அந்தச் செய்தி பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தது. அந்தப் பதிவை அடிப்படையாகக்கொண்டு பல பின்னூட்டங்கள், பல பதிவுகள், பல இரங்கல் செய்திகள் எனப் பலபதிவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தன. அதன் அடிப்படையிலேயே செயற்கை நுண்ணறிவு செயற்பட்டு ஒரு முன்னெச்சரிக்கையாக அவர் வங்கிக் கணக்கை முடக்கியிருக்கிறது என முகாமையாளர் விளங்கிக்கொண்டார்.

மயங்கிக் கிடந்த குணதேவனை மருத்துவமனைக்கு அனுப்பிவைப்பதற்காக அவசர சேவையை அழைத்திருந்தனர் வங்கி அதிகாரிகள். வங்கி முகாமையாளரின் முன் அநாதரவாகக் கிடந்தது முப்பது இலட்சம் என எழுதப்பட்டிருந்த அந்தக் காசோலை. ■



# மௌனம் பேசியதே

வேலணையூர் தாஸ்

நேரடியாக பேசிக்கொள்பவர்களைவிட
ஏதோ காரணத்தால்
தற்போது பேசாமல் இருப்பவர்கள்
அதிகம் பேசிக்கொள்கிறார்கள்...(மனதிற்குள்)

அன்பாக விசாரிக்கிறார்கள்
திட்டிக்கொள்கிறார்கள்
தன்னிலை விளக்கம் சொல்கிறார்கள்.....
தான் செய்ததுதான் சரி என்று
நினைத்துப் பேசாமல் இருக்கிறார்கள்
ஆனால், என்ன...
பேசிக்கொள்பவர்களைவிட பேசாமல் இருப்பவர்கள்தான்
அதிகம் பேசுகிறார்கள் ....

அவன்/அவள்
காணும்போது (மனதிற்குள் )
good morning அல்லது hi செல்லம்...சொல்கிறார்கள்.
'ஒன்று நன்றுள்ளக் கெடும்' என்று
திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார் என்று
அவர்கள் செய்த நன்மைகளை நினைக்கிறார்கள்

இனிப்பேசலாம் எனத்தான் முடிவெடுக்கிறார்கள்
அவன் /அவள் செய்த தீமைகளையும்
எண்ணிப் பார்க்கிறார்கள்
இப்பொழுது இரண்டையும்
நிறுத்துப்பார்க்கிறார்கள் முடிவெடுக்கமுடியாமல்
மனதிலும் மௌனம் ஆகிறார்கள்...

... மற்றப் பக்கம் நின்றும் பார்க்கத்தானேவேண்டும் என்று
மீண்டும் சமாதானமாகிறார்கள்
இன்று பேசிவிடவேண்டும் என
புன்னகை பூசி எழுந்துவருகிறார்கள்
ஆனால், ஏனோ இப்போதும் பேசாதிருக்கிறார்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவகி

காலம் கொடுத்த பெறுமதிசார் சொத்து
ஐந்தில் நான்கு பிள்ளைகளைத்
தொலைத்தவள் நான்.
போரின் உக்கிரத்தின் பிடியில்,
வலுக்கட்டாயமாக...
போருக்கு வாழ்க்கைப்பட்ட
மூத்த இரு பிள்ளைகள்..
போரின் வாசமே சுவாசிக்க விரும்பாத
இளைய பிள்ளைகள் இரண்டு..
கூடப்பிறந்தவர்களுக்காக
பழிதீர்க்கப்பட்டார்கள்.
போரின் சாபத்திற்கு ஆட்பட்டு
சாகாத பிணங்களாய் வாழும்
நானும் என் கணவனும்.
விமானங்களின் வேகம்..
கணவரின் மூளைவரை
சென்று கொன்றுவிடாமல்...
உயிரை மட்டும் விட்டுச்சென்றது
காலத்தின் கைதிகளாக சிறைக்கு வெளியே
காலம் தனிமைப்படுத்திய
மாவீரர்களின் பெற்றோர் நாங்கள்....
காணாமல்போன பிள்ளைகளைத் தேடுபவர்கள்.
மகளொன்றின் உறவில் வாழும் ஏதிலிகள்.
வம்சங்களைத் தொலைத்த ஏழைகள்....
தனியே இருந்து தவம் செய்யும் தவசிகள்...
மூளை சிந்தித்துக் கொண்டே இருக்கும்.
மூச்சுவிடப் பயமாக இருக்கும்...
பெற்ற பிள்ளைகளை வளர்த்த காலங்கள்
வடுக்களாகி வந்து வந்து போகும்....
புண்பட்ட நெஞ்சை மீண்டும்..மீண்டும்...
கோதிக் கோதி... தீ மூட்டும்.
இறப்பை எப்படி வரச்சொல்வது...?
அது நினைத்தபடி வருகிறது....
வாழவேண்டியவர்களை எல்லாம்...
வண்டி வண்டியாக கொண்டு போயிற்று...
அதை நினைத்தும் சகித்தும் வாழச் சிலரை
வேதனையில் வேக வைத்துப் பார்க்கிறது
முதியவர்களை யாருமில்லாதவர்களாக்கி..
அநாதைகளாக்கி....தனிமைப்படுத்தி...
காயம் கொண்ட இதயங்களை...
நோய்வாய்ப்படுத்துகிறது.....
இது எமது இனத்துக்கான சாபம்.
போரைத் தந்து...போக்கிடமில்லா வாழ்வைத் தந்து
வதைத்து...வலிந்து வாழ வைத்திருக்கிறது..
வந்தோம்...முடிந்தது, வாழ்கிறோம் என இருக்க
என் பிள்ளைகள் வயதிருக்கும் சந்ததிகள்
ஒரு நாள் வந்தார்கள் ..
முகங்களைக் கட்டி திருடர்களாக
அது அவர்களின் தொழில்.
பிள்ளைகள் போல என நினைத்தோம்.
எதைக் கொண்டுசெல்லலாம் என்று..
வீடு முழுவதும் தேடுகிறார்கள்...
மூளை இயங்காதவரின் கால்களைக் கட்டுகிறார்கள்.
முகத்தை மூடிமறைக்கிறார்கள்.
கப்பம் கேட்கிறார்கள்...
காதிலிருக்கும் தோட்டைக்கூட
அறுத்து எடுக்கிறார்கள்.
இரத்தம் பாய்கிறது....பாசமற்ற திருடர்கள்.
தங்கள் தாய் வயதிலிருக்கும் என்மீது....
வன்மங்களை எறிகிறார்கள்...
இவர்கள் ஏன் இப்படி?
மிருகக் குணங்களை வேட்டையாட...
போரிட்ட என் பிள்ளைகள் கொடுத்த உயிர்கள்
வீணாகிப்போனதா?
மனித குணங்களை எரித்து...
மிருக உணர்வைத் தூண்டி
மனிதத்தை உருக்குலைத்து ...
பண்பாட்டைச் சிதைப்பதற்காக...
அதிகாரச் சிற்பிகள்...
இவர்களைச் செதுக்கியிருக்கிறார்கள்.
தன் இனத்தை தானே அழிக்கும்..

கிருமிகளாக ...மிகவும் சாதுரியமாக...
இவர்களை வார்த்திருக்கிறார்கள்...
வீணாகிப் போனது...தவம்
தேவையற்றதாகிய ....மரணங்கள்.
விலையில்லா உயிர்களின் தியாகங்கள்...
மலிந்து மானபங்கப்பட்டன...
அர்த்தமற்றதாகி..அவமதிக்கப்பட்டு......
கால்களால் உதைத்து.....உள்ளதைப் பறித்து..
இப்படிக் கொடூரமாய்...
இந்த சந்ததிகள்..உருவாகியதேன்?
இவர்கள் போதையின் அடிமைகளாகப்
போதிக்கப்பட்டிருக்கிறார்கள்...
வாழ்வின் அர்த்தம் தெரியாத வெறும் உடல்கள்.
கண்டதை விழுங்கி.. காம வெறி கொண்டு
பிள்ளை, தங்கை, கிழவி தெரியாத
குருடர்களாக இவர்கள்
மாற்றப்பட்டிருக்கின்றார்கள்...
தம் இனத்தை தாமே தின்னும்...
காமப்பசி கொண்ட பயங்கரவாதிகள்.
இரத்தத்தில் புகுந்து சுண்டி இழுப்பதில்
இன்பம் காணும்..இயமனின் பிள்ளைகள்.
மூக்கின் வழியே தின்று மூளையைத் தீண்டி..
வெறிகொண்டு அலையும் வேட்டைநாய்களாக
தீனி போட்டு வளர்த்திருக்கிறார்கள்.
இனிப்புகளில் கலந்து...
புளிப்புகளில் நிறைந்து...
தனியாக உருட்டி...மாவாகப் பிசைந்து...
இரத்தத்தில் செலுத்தி... 'மனிதம்' மறப்பதற்காய்
எதையோ அவர்கள் பழகியிருக்கிறார்கள்...
உறவுகளின் உண்மைகளையும்...
அன்பின் அர்த்தத்தையும்... பிறழ்வாக்கி..
பிறப்பைத் தந்தவர்களை, கூட வந்தவர்களை...
அடித்துத் தின்னும் பேய்கள் ...
சாந்திகொள்ளாச் சலனங்கள்
இந்தப் பேய்களை எப்படி விரட்டுவது?
பிடித்து உலுக்கிப் பிடரியில்...
அடித்தாலும் போகாது...
நாக்கைக் கிழித்து..
உச்சி மயிர் இழுத்தாலும் அழியாது...
காற்றாய்க் கலந்த என் பிள்ளைகள்..
இந்தக் காமவெறியரின் மூச்சுப்பட்டு
முனகுகிறார்கள்.. "அம்மா என அழுகிறார்கள்.
என் காதுகளுக்கு கேட்கிறது.
சிறைக்கு பின்னால் இருக்கும் என் பிள்ளைகள்..
வருவார்கள் எனும் எண்ணம்
நிஜமாகவேண்டும்...
நான் போராட வேண்டும்....
அதற்கு என் உயிர் வேண்டும்...
கையெடுத்துக் கும்பிடுகிறேன்....

## போரின் கவிதை 13




ஆனந்தீ

எங்களிடம் எதுவுமே
இல்லை ராசா... இந்த
இரண்டு உயிர்களும்தான் மிச்சம்
எங்களை விட்டுடுங்கோ.....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய தமிழ் இலக்கியங்களில் புத்தபெருமானின் போதனைகள்



05

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
நிகழ்ச்சித்திட்டத் தலைவர்,
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்,
முகாமைத்துவ அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

தமிழ் இலக்கியங்களும் பௌத்த தத்துவங்களும் கௌதமர் அருளிய பல தத்துவங்களும், போதனைகளும் மக்களினால் வெகுவாகப் பாராட்டியும், போற்றியும் கொண்டாடப்படுகின்றன. பௌத்த மதத்தின் அடிப்படையான ஒழுக்கத் தத்துவங்களினை இயம்புகின்ற நூல்களில் முதன்மையானதாக திரிபிடகம் விளங்குகின்றது. இதன் மூலப்பிரதி பாளி மொழியில் எழுதப்பட்டது. திரிபிடகம் என்பதில் திரி என்பது எண்ணிக்கையில் மூன்று என்றும் பிடகம் என்பது "கடகம்" அல்லது "கூடை" எனவும் பொருள்படும். அதாவது மூன்று வகுப்பு அல்லது மூன்று அடுக்கு எனப் பொருள் அமையும். சுத்தபிடகம், வினயபிடகம், அபிதம்ம பிடகம் ஆகிய மூன்றினையும் உள்ளடக்கியதாக திரிபிடகம் அமைந்துள்ளது.

சுத்தபிடகம் புத்தரின் உபதேசங்களின் தொகுதி ஆகும். சுத்தபிடகத்தின் ஐந்து பிரிவுகளில் ஒன்றான குத்தக நிகாயத்தின் ஒரு பகுதியாக தம்மபதம் அமைந்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மெய்யியல் துறைத்தலைவர் மகாதேவன் என்பவர் பகவத்கீதை, திருக்குறள் போலவே தம்மபதம் உலகத்தின் சிறந்த ஒழுக்க நூல் ஆகும் என்கிறார் (மகாதேவன், 1952, P.IV). கௌதமரின் சித்தாந்தங்கள் வாழ்வியலுக்குத் தேவையான விடயங்களினைப் புகட்டினாலும் இவ்வாழ்கையினை விடவும் துறவுக்கு முக்கியத்து வம் கொடுப்பதனை அவதானிக்கலாம்.

மேலும் தம்மபதம் புத்தரின் போதனைகளில் ஒழுக்கக் கருத்துகளினை அதிகம் வெளிப்படுத்துவதாக, குறிப்பாக "பரிநிர்வாணத்துக்கான" வழிமுறைகள் சார்ந்த அறம் குறிப்பிடப்பட்டுள்ளது. நிர்வாணம் என்பதை பாளி மொழியில் "நிர்பானம்" அல்லது 'நிப்பாணம்' என அழைப்பர். நிர்வாணம் என்பது துக்கமில்லாத பேரானந்த நிலை. இது இறந்த பின்பு எய்தும் இன்பமன்று. இப்பிறப்பிலேயே, இப்பொழுதே, இங்கேயே அடையும் "ஜீவன் முக்தி நிலை" ஆகும். இந்த நிலையை அடைதல் என்பதை ஆராய்கின்ற முயற்சியானது "திட்டி" என்கின்ற குற்றத்தின் பாற்படும். ஆகாயத்தில் பறக்கும் பறவையின் சுவட்டைக் காணமுடியாது. அது போன்றதே நிர்வாணநிலை என பௌத்தர்கள் கூறுவர். உடல்சார் பார்வை, தடுமாற்றம், சடங்கு சம்பிரதாயங்கள் பொறுத்ததாய் அமைகின்ற ஒழுக்க நிலைப்பாடுகள், புலன் இன்ப உணர்ச்சி மற்றும் கெடுநினைப்பு ஆகியவை விடுதலைக்குத் தடையாக உள்ள விலங்குகள் ஆகும். புத்தபகவானின் தோன்றலுக்குப் பின்னரான படைப்புகளில் பகவானின் கருத்துகளின் பிரதிபலிப்புகள் அதிகமாக உள்ளதனை அவதானிக்கலாம். இதற்குத் தமிழில் வந்த இலக்கியப் படைப்புகள் விதிவிலக்கு அல்ல. சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரையில் பௌத்த சமண தத்துவங்களின் பிரதிபலிப்புகள் நிறைந்துள்ளமையை பல முன்னைய ஆய்வாளர்கள் தமது ஆக்கங்களில் குறிப்பிட்டுள்ளனர். இக்கட்டுரையில் இப்பகுதியில் பண்டைய இலக்கியங்கள் முதல் சமகால இலக்கியங்கள் வரை பௌத்த தத்துவங்கள் எத்தகைய சொல்வாக்கினைச் செலுத்துகின்றன என்பதும் இங்கு ஆராயப்படுகின்றது.

புத்தபகவானின் வெவ்வேறு சூழ்நிலைகளில் வழங்கப்பட்ட நானுற்றி இருபத்தி மூன்று போதனைகளை 23 இயல்களுக்குள் உள்ளடக்கிய நூலாக அமைவது தம்மபதம். இக்கட்டுரையில் முன்னர் குறிப்பிட்டதுபோல் உலகில் புகழ் பெற்று, நிலைத்துநிற்கும் சமயங்கள் எல்லாம் ஆன்மா இருப்பினை ஏற்றுக்கொள்ளுகின்றன. ஆனால் பௌத்தம் மட்டும் ஆன்மாவின் இருப்பினை ஏற்றுக்கொள்ளவில்லை. கிரேக்க தத்துவஞானி அரிஸ்டோட்டில் உயிரினத்தின் முழுமையானதும் முதன்மையானதுமான செயற்பாடாக ஆன்மா அமைகின்றது என்கின்றார். புத்தரின் கருத்துப்படி மனிதன் தன்னைத்தானே காதலிப்பவனாக இருப்பதன் மூலம் தன்னையும் தான்சார்ந்த சமூகத்தினையும் நிலைப்படுத்திக்கொள்ளலாம் என்கிறார். மேலும் புத்தபகவானின் போதனையின்படி மனம் வகுத்த வழிதனில் வாழ்க்கையினை வழிப்படுத்தாது. நல்லவை எவை தீயவை எவை என உயர்ந்த விழிப்புணர்வுடன் அவதானித்து உயரிய மனப்பான்மையுடன் வாழ்தல்வேண்டும் என்கின்றார். கௌதமர் மேலும் இரட்டைச் செய்யுள் என்னும் இயலில் முதலாவது போதனையில் "மனோபுப்பம் காமதம்மம்" மனம் சிந்தனைகளின் பிறப்பிடமானது. மனம்தான் எல்லர் செயற்பாடுகளுக்கும் அடிப்படையாகின்றது. இப்பிறப்பில் "அரகந்த நிலை"அடைதலும் (உயரிய தர்மக் கோட்பாடுகளுக்கு அமைவாக வாழ்ந்து) முற்பிறப்பில் செய்த செயல்களின் விளைவுகளுக்கு அக (கார்மா) அரகந்தநிலையிலும் பாதிப்புகளினை ஏற்படுத்தும். அரகந்த நிலை என்பதனை இந்து தத்தத்துவத்தின்படி இயம்பின் "முத்தி" எனும் நிலையாகும். பௌத்த தத்துவங்களின்வழி இயம்பின் நிர்வாணம் அடைவதற்கான நிலையினைக் குறிக்கும். முன் செய்த வினைப் பயன் நிழல்போல் பின்தொடர்ந்து வாழ்வியலில் பாதிப்புகளினை ஏற்படுத்தும் என்ற கர்மா குறித்த கருத்து பொய்யா மொழிப்புலவர் வள்ளுவரின் "தீவினை அச்சம்" என்னும் அதிகாரத்தில் உள்ள பின்வரும் குறளில் பிரதிபலிக்கின்றது.

*தீயாவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை*
*வீயாதடி உறைந்தற்று (திரு. 208)*

ஒருவரின் நிழல் அவன் காலில் சரண் அடைவது போல் அவன் செய்யும் தீமைகள் மறுபிறப்பிலும் அவனைத் தொடரும். பௌத்த சமயத்தில் மறுபிறப்புக் குறித்து நம்பிக்கையில்லாதபோதும் அதாவது ஆன்ம விடுதலையானது இப்பிறப்பிலேயே ஏற்படவேண்டும் என்ற சிந்தனைப்பாங்கு பௌத்தத்தின் அடிநாதமாக இருந்தாலும்கூட கௌதமரின் கர்மா குறித்த சிந்தனை வலுவாகவுள்ளது. முன்வினைப் பயனே மறுபிறப்புத் தொடருக்குக் காரணம் என்கின்றார். அதனால்தான் மறுபிறப்பினை பௌத்தம் வலியுறுத்துகின்றது. நன்மை தீமை போன்ற செயல்களினை மனமானது ஆற்றவல்லது.

மனத்தின் வெளிப்பாடே எண்ணங்களும் செயல்களும். இவ் எண்ணங்களின் செயற்பாடுகளே மனிதனை நிழலாக பின்தொடருகின்றன. இக்கருத்தினை திருவள்ளுவர் திருக்குறளில் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாக 459 ஆவது குறளில்

*மனநலத்தின் ஆகும் மறுமைமற்றதும்*
*இனநலத்தின் ஏமாப்புடைத்து (திரு. 459)*

(தொடரும்)

# ஊர்ப்புதினம்

பாகம் 3

இராகவன்

இப்ப நான் பெரிசாயொண்டும் வாசிக்கிறேல்ல. ஏதோ கிடைச்சதை வாசிப்பன். தேடித்தேடி வாசிக்கிற பழக்கத்தைக் கைவிட்டுட்டன். அப்பவெல்லாம் இப்பிடியில்லை. ஒரு புத்தகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டாக்காணும். அது ஆரிட்டயிருக்குமெண்டு 'கெஸ்' பண்ணி மோப்பம் பிடிச்சுப்போய் அதை வாங்கியந்து வாசிச்சு முடிச்சுப்போட்டுத்தான் மறுவேலை பாப்பன். 2006 ஓகஸ்ட்டில ஊரடங்குச்சட்டம் போட்டிருக்கேக்குள்ளயும் அப்பிடித்தான். வீட்டில சும்மாயிருக்கத் தலைவெடிக்கும். ஏதாவது வாசிச்சுக்கொண்டேயிருக்கவேணும். அந்த மூட்டம் குப்பிழான் ஐ.சண்முகன் எனக்கொரு நல்ல வேலை செய்தார்.

அவரிட்டக் கட்டுக்கட்டாயிருந்த சற்றடே றிவியூவின் சகோதர வாரப்பத்திரிகை எண்ட பேரில வெளிவந்த "திசை"யை "இஞ்சை சும்மா கிடந்து இடத்தைப் பிடிக்குது. உனக்குத் தேவையெண்டால் எடுத்துக் கட்டிக்கொண்டு போடாப்பா!" எண்டொருநாள் என்னட்டச் சொன்னார். எனக்கது புதையல் கிடைச்சமாதிரியிருந்திச்சுது. பஞ்சியப்பாராமல் குண்டுக் கட்டாக் கட்டி வீட்டை கொணந்திட்டன். அதுக்குப் பிறகு என்ரபாடு வலுகொண்டாட்டந்தான்.

எனக்குப் பன்னிரண்டு வயதில 'திசை' அறிமுகமாச்சுது. மூத்தண்ணாதான் அதை வாங்கிக்கொண்டுவந்தவன். எனக்கு, முந்திச் சின்னனில எந்தப் புதுப்பேப்பரைக் கையில எடுத்தாலும் உடன மணந்து பாக்கிற பழக்கமிருந்தது. அதால திசையைக் கையில எடுத்தவுடனை முதல்ல மணந்துபாத்தன். அது ஒரு மயக்கிற மணம். கொஞ்சம் பளபளக்கிற பேப்பராயுமிருந்தது. அப்பிடியொரு டிசைனில நான் அதுக்கு முந்தியொரு பேப்பரையும் பாக்கேல்ல எண்டதால எனக்கு திசையை நல்லாப் பிடிச்சுது. நான் அதில சிறுகதையளத்தான் முதல்ல வாசிப்பன். எங்கட அம்மாவும் முதல்ல சிறுகதையளத்தான் வாசிப்பா. அப்பிடி அவா, திசையில வாசிச்சுப்போட்டு பிறகு அயல் வீட்டுப் பெண்களுக்குச் சொன்ன கதைதான் "கோசலை".

30

முதலில் கோசலை, அலையில்தான் வெளிவந்திருந்தது. அதை எழுதியிருந்த ரஞ்சகுமார் தனது பெயரைக் குறிப்பிடாமல் அம்மன் என்ற பெயரையே அதில் குறிப்பிட்டிருந்தார். அந்த விபரம் முதலில் எனக்குத் தெரியாது. ரஞ்சகுமாரின் ஒன்றுவிட்ட தம்பியான ஆதிதான் இந்தத் தகவலை எனக்குச் சொன்னது. (ஆதியின் முழுப்பெயர் செல்லத்துரை பிரணவநாதன். இவர் தற்போது உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவிவகித்துவருகிறார்) திசை வார இதழ் வெளிவரத் தொடங்கியதும் அதில் போர்க்காலக் கதைகள் எண்ட தலைப்பில "கோசலை" ரஞ்சகுமார் பேரிலேயே மீள்சுரமானது. அதைத்தான் அம்மா வாசித்துவிட்டு அயல் பெண்டுகளுக்கு உருகி உருகிச் சொன்னதைக் கேட்டு நானும் வாசிச்சன். அப்போது திசை வார இதழ், சிறுகதைப்போட்டியொன்றையும் நடத்தியது. அதில்தான் ரஞ்சகுமார் எழுதியிருந்த "கோளறு பதிகம்" முதற்பரிசு பெற்றது.

அக்கதையில் வரும் கதைசொல்லியின் பாட்டன் கதை சொல்லிக்கு ஒரு பேய்க்கதை சொல்லுவார். அதில் வரும் பேய் , மாட்டுவண்டிக்காரனான பாட்டனின் மாட்டுவண்டியில் வந்து ஏறியிருக்க மாடுகளிரண்டும் வெருளும். (இந்தக் காட்சியைத்தான் ஓவியர் மாற்கு திசையில் தனக்குரிய பாணியில் வரைந்திருந்தார்) மாடுகள் வெருள்வதைக் கண்டதும் என்ன நடக்குது எண்டது பாட்டனுக்கு விளங்கிவிடும்.

அவர் உடனே துவரங்கம்பை எடுத்து அந்தப் பேய்க்கு ஒரு சாத்துச் சாத்துவார். (அப்போது பாட்டன் சொல்லும் ஒரு வசனத்தை அப்ப நண்பன் பிறேமன் என்னட்ட அடிக்கடி சொல்லிக் கெக்கட்டம் விட்டுச் சிரிப்பான். பிறேமனைப் பற்றி ஊர்ப்புதினம் முதலாம் பாகத்தில விலாவாரியாச் சொல்லியிருக்கிறன். இவன்தான் அப்ப யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில நடந்த விநோத உடைப்போட்டியில ஆமையாக வந்து அசத்தினவன்) அந்தக்கதை எனக்கு வலுமுசுப்பாத்தியாயிருந்திச்சுது. இண்டைக்கும் மறக்கேலாத கதை அது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்போம்





## ஆங்கிலம் கற்போம்




## பச்சைக் கிளியே வா... வா...

பச்சைக் கிளியே வா வா!
பாலும் சோறும் உண்ண வா!
கொச்சி மஞ்சள் பூச வா!
கொஞ்சி விளையாட வா!
பைய பைய பறந்து வா!
பாடி பாடிக் களித்து வா!
கையில் வந்து இருக்க வா!
கனியருந்த ஓடி வா!

## வழிகாட்டுவோம்



## பொதுஅறிவு

தன் வாழ்நாளில் நீரே அருந்தாத மிருகங்கள் எவை?

**கங்காரு, எலி**

ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன?

**ஏழு**

பிறக்கும்போது குழந்தைகளுக்கு எத்தனை எலும்புகள் இருக்கும்?

**330**

தாஜ்மஹால் எந்தவகை மார்பிளால் கட்டப்பட்டுள்ளது?

**மக்ரானா**

பனிக்கட்டிகளின் மேல் வளரும் செடிகளின் பெயர் என்ன?

**க்ரயோ பைட்ஸ்**

டயாலிஸிஸ் இயந்திரத்தைக் கண்டறிந்தவர் யார்?

**வில்லியம் கோல்ப்**

உலகில் பூக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?

**நெதர்லாந்து**

நமது ஒவ்வொரு கண்ணிலும் எத்தனை தசைகள் உள்ளன?

**ஆறு தசைகள்**

நாய்களே இல்லாத ஊர் எது?

**சிங்கப்பூர்**







**ர.சபிஸ்ணன்**
தரம் 3
கல்வயல் /ஸ்ரீ ஷண்முகானந்தா வித்தியாலயம்



**இ.திரிசன்**
தரம் 2 B
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை



**பி.கிரிஷ்ணி**
தரம் 1C
சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.




**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**0773165555**



**வெலிற்றர் விரித்திகன்**
தரம் 6
யா /புனித பத்திரிசியார் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org